
www.tamilarangam.net

Raya

# தூண்டில்

RAYA
87 RUE DE COLOMBES
92600 ASNIERES SUR -
- SEINE , FRANCE



TAMILISCHE ZEITSCHRIFT DES SÜDASIEN BÜRO NR. 36

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## யிலிருந்து வந்த பிரசுரம். 3

தற்பொழுது தமிழீழப் பிரதேசம் மூன்ருவது கட்டமாக வன்முறைகளின் பலிகளமாகத் திகழ்கின்றது.

1987 யூலை ஒப்பந்தம் உருவாக்கப்பட்டு புலிகளுக்கும் இந்தியப்படைகளுக்கும் இடையே உருவான யுத்தமும், தற்போது புலிகளுக்கும், இலங்கை அரசுக்கும் பேச்சுவார்த்தைகள் முறிந்தபின் உருவான யுத்தமும் எதற்காக? என்பதில் மக்கள் புரியமுடியாத நிலையிலேயே உள்ளனர்.

நிச்சயமாக அவர்களால் புரியமுடியாதுதான். ஏனெனில் எந்தவொரு மனிதரும் ஒரு பிரச்சினை பற்றி ஆராய்கின்றபொழுது, அவர் குறிப்பிட்ட துறைபற்றிய அடிப்படை ரீதியான விஞ்ஞான நோக்கினைக் கொண்டிருத்தல் வேண்டும். அவ்வாறு இல்லாதவிடத்து அவர் தனது ஊகங்களையும், தனக்குக் கிடைக்கும் தகவல்களையும் அடிப்படையாக வைத்தே முடிவெடுப்பார். இதில் பிரச்சினையின் உருவாக்கத்தைச் சரியானமுறையில் இனங்காண தவறிவிடுகின்ருர்.

இதனையிட்டு நாம் மக்களில் பழியைப் போட்டுவிட்டு, ஏதோ ஒரு கட்டத்தில், எதிரிகளால், எதிர்ப்புரட்சிகர சக்திகளால் மக்களுக்கு மரண வேதனை அதிகரிக்கும்போது அவர்கள் விழித்தெழுவார்கள், எதிரிகட்கும், எதிர்ப்புரட்சிகர சக்திகட்கும் எதிராகப் போராடுவார்கள் என்று நினைப்பது வரட்டுச் சிந்தனையாகும்.

எந்தவொரு விடுதலை போராட்டங்களிலும் மக்களில் சிலரே புரட்சியின் அவசியத்தை, மதிப்பீட்டைச் சிந்திப்பார்கள். அவர்களே ஒரு முன்னணி அமைப்பை உருவாக்குவார்கள்.

உருவாக்கப்படும் அமைப்பின் பிரச்சினைக்கான வேலைகளைப் - பொறுத்து அது ஒரு சமூக மக்கள் கூட்டத்திற்கான பல வெகுஜனங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் புரட்சிகர கட்சியாக மாறும்.

தமிழீழப் பிரதேசத்தில் இலங்கை-இந்திய ஒப்பந்தத்திற்கு முன்னர் பல இயக்கங்கள் இருந்தன. இந்திய, இலங்கை, புலிகளின் மேலாதிக்கத்தால் அமைப்புகளின் வடிவங்கள் முற்ருக அழிக்கப்பட்டன.

இவற்றில் பல புரட்சிகர நோக்கினையுடைய போராளிகள் அழிக்கப்பட்டனர். பலர் உதிரிகளாக்கப்பட்டனர்.

ஒப்பந்தத்திற்கு முன்னர் இருந்த இயக்கங்களில் பல இன்று இலங்கை, இந்திய அரசுகளின் பிச்சை நாய்களாகச் செயற்படுகின்றன.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# என்ன செய்ய வேண்டும்!

உதிரிகளாக்கப்பட்டவர்களில் பலர் மக்களுக்காகச் சிந்திக்கின்றனரே தவிர, களத்தில் காலடி எடுத்துவைப்பதில் அவர்கள் பல மேலாதிக்கங்களின் அராஜகங்களுக்கு முகம்கொடுக்கவேண்டிய நிலை உள்ளது.

மற்றையோர் ஆளைவிட்டால் காணும் என்ற நிலையில் சாதாரண வாழ்வோட்டத்துடன் கலந்துவிட்டனர்.

எமது தேசத்தில் வாழும் மக்கள் தத்தமக்கான கண நேரப் பிரச்சினைகளையே நோக்குகின்றனர் (ஒவ்வொருவரும் வேறுபட்டவகையில்). அவை தவிர்க்கப்படவேண்டும்

பிரச்சினைகள் அற்ற நிம்மதி வாழ்வு கிடைக்கவேண்டும் என்பதே மனிதரின் இயல்பு, இதுவே இன்று தமிழீழப் பிரதேசத்தில் நிலவுகிறது

நடைமுறையில் யாழ்ப்பாணம் கிளிநொச்சி மக்களது பிரச்சினை வேறு, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா, கிழக்கு மாகாண மக்களது பிரச்சினை வேறு. ஆனால் பொதுவான அடிப்படைப் பிரச்சினை ஒன்றேயாகும்.

வடக்கு, கிழக்கில் வாழுகின்ற தமிழ்த் தேசிய இனம்; முஸ்லீம் இனம், வரலாற்று ரீதியாக பெற்ற அடிப்பிணைகளில் இருந்து சிங்களமக்களை மூலமாகக்கொண்டு விளங்கும் பேரினவாத ஆட்சியாளர்களின் கீழ் வாழ முடியாது என்பது தெளிவாகியுள்ளது.

இவ்வினம் சுயநிர்ணய உரிமையின் கீழ் பிரிந்து செல்லும் உரிமையுடைய இனமாகும். ஏனெனில் பாரம்பரிய பிரதேசமாக வடக்கு, கிழக்கினைக் கொண்டுள்ளது. பொதுவான கலாச்சாரம் (மனவுணர்வு) தமிழ், முஸ்லீம் மக்களிடையே ஒன்றுகவுள்ளது. பொது மொழியாகத் தமிழ் மொழி விளங்குகிறது.

பொது பொருளாதாரஅமைப்பு என்ன? என்பதை நோக்கும் போது அதற்கான வளங்கள் உள்ளன என்பதை மறுக்கமுடியாது. பொருளாதார அமைப்பை இன்று ஏகாதிபத்திய நாடுகள் பேரினவாதத் தரகு அரசுடன் கைகோர்த்து தமது கட்டுப்பாட்டில் வைத்திருக்கின்றன.

எனவே நாம் பொது பொருளாதார அமைப்பைக் கட்டியமைக்கும் நோக்குடன் பேரினவாத அரசுக்கும், ஏகாதிபத்தியங்களுக்கும் எதிராகப் போராடவேண்டியநிலையில் உள்ளோம்.

எவ்வாறு எமது பொருளாதாரம் ஏகாதிபத்தியக் கட்டுப்பாட்டில் உள்ளது?

www.tamilarangam.net

வடக்கு, கிழக்குப் பொருளாதாரம் ஒரு குறைவிருத்தி விவசாய பொருளாதாரமாகவே இன்றுவரை உள்ளது. இவ் விவசாயத் துறையில் உரவகைகள், கிருமிநாசினி, உற்பத்தி சாதனங்கள்... என்றெல்லாம் ஏகாதிபத்தியங்களின் மேலாதிக்கம் ஏற்படுத்தப்பட்டு உற்பத்தியில் ஏற்படும் இலாபத்தின் மிகப் பெரும் பகுதி ஏகாதிபத்தியங்களின் கைகளுக்குச் செல்கின்றது.

தமிழீழப் பகுதியில் மூலதன வளர்ச்சி திட்டம் போட்டு தடை செய்யப்பட்டுள்ளது. அதாவது இங்கு எந்தவொரு முதலீட்டுக்கான உற்பத்திகளையும் ஏகாதிபத்தியம் அனுமதிக்க மாட்டாது. வெறும் உற்பத்திக்கான சில மூலப் பொருட்களின் உற்பத்திக்கும், மேலும் சிலசிறுகைத் தொழில்களுக்குமே அனுமதியளிக்கிறது. உதாரணமாக, கடல் உணவை ஐஸ்ஸில் பாதுகாத்து அனுப்புதல், அலுமினியத்தைப் பொருட்களாக்குதல், உப்பு உற்பத்தி மூலப்பொருளை கொண்டு சிறு இரசாயனப்பொருள் உற்பத்தி, சீமெந்து உற்பத்தி போன்றன.

இவ்வாறு வசதிகளை ஏகாதிபத்தியங்களுக்கு வழங்குவதற்காகப் பேரினவாதக் கட்சி தரகு பெறுவதன் மூலம் அவர்களை அண்டி வாழ்கின்றனர்.

எனவே நாம் மூலதன வளர்ச்சியுடன், பொதுப் பொருளாதார அமைப்பைக் கட்டியமைக்க வேண்டுமானால் ஏகாதிபத்தியத்தையும் எதிர்கொள்ளும் ஒரு வரலாற்றுக்கு தள்ளப்பட்டுள்ளோம்.

தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்க வேண்டுமெனக் கூறி, மாகாணசபை ஆட்சி அதிகாரத்திற்காக புலிகள் இலங்கை அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தியிருந்தனர். ஆறுவது திருத்தச் சட்டத்தை நீக்கு என்றனர். இவர்களின் இலக்கு என்ன?

1977 தேர்தலில் தமிழர் விடுதலைக்கூட்டணி தமிழீழக் கோரிக்கையைக் கூறி பாராளுமன்ற ஆசனங்களுக்குச் சென்ற கதையா?

புலிகள் ஒரு தேசிய வாதத் தன்மையைக் கொண்டிருந்த போதிலும் அவர்களின் அரசியல் வழி தமிழ்மக்களின் அரசியற், பொருளாதார, சமூக விடுதலைக்கான சரியான பாதையாக அமையவில்லை என்பதே எமது நோக்கு.

புலிகளின் வர்க்க அணியின் குணம்சம் எமது மக்களின் விஞ்ஞான ரீதியான தொலைநோக்கு இல்லாத உணர்வுகளை ஒத்ததாகும்!

புலிகள் கூறுவதுபோல் சுயநிர்ணய உரிமையின்படி தமிழீழம் தீர்வு என்றால் இவர்கள் அதற்கான அடிப்படைப் பிரச்சினைகளுக்கு இன்று எவ்வாறு முகங்கொடுக்கின்றனர்

அதாவது இன்று முஸ்லீம் மக்கள் (வடக்கு, கிழக்கில் வாழ்வோர் தென்பகுதியில் வாழ்வோர்), சிங்கள மக்கள், மலையக மக்கள் ஆகியோரது ஆதரவை, பங்களிப்பை பெறுவதற்கான முயற்சிகள் எதுவு மேற்கொள்ளப்படாமல், அவற்றை சீர்குலைப்பதிலேயே புலிகள் ஈடு பட்டுள்ளனர்.

www.tamilarangam.net

கிழக்கு மாகாணத்தில் முற்றாகவும், வடக்கில் எல்லைப் புறங்களிலும் தமிழ்ப் பிரதேசம் திட்டமிட்ட குடியேற்றத்தால் துண்டாடப்பட்டு வருகிறது.

அது மட்டுமல்லாது திருகோணமலையில் பாரம்பரிய இனமான தமிழ் மக்கள் வெளியேற்றப்பட்டுள்ளார்கள்.

அத்துடன் வடக்கு, கிழக்கிற்கான பொருளாதாரத்தடை, பொருளாதார அழிப்பு, இன அழிப்பு என்பன இன்று எமது விடுதலையை பெருமளவிற்குப் பின்னடையச் செய்துள்ளன.


இவற்றுக்குப் புலிகள் எவ்வாறு முகம் கொடுக்கின்றனர்?

புலிகளிலுள்ள உணர்மையுள்ள போராளிகள் தமது வர்க்க நிலையை இன்று ஆய்வுசெய்வதன் ஊடாக எமது போராட்டத்தைப் பற்றிய தெளிவான முடிவு எடுக்கும் வரலாற்றுக்குத் தள்ளப்படவேண்டியவர்களாயுள்ளனர்.

புலிகளின் தலைமைகள் மத்தியில் உள்ள ஏகபோகத்தன்மை, ஜனநாயகமின்மை, அரசியல் வழி பற்றித் தவறான போக்கு, மனித விரோத தன்மை ஒழிக்கப்படவேண்டும்.

இதற்காக ஒவ்வொரு சிந்தனையாளரும், புலிகளில் உள்ள உணர்வுள்ள போராளிகளும் செயற் படவேண்டும். நாமிழந்த தியாகிகளுக்கும், மக்களுக்கும் எமது வருங்கால வாழ்வை உறுதிப்படுத்த ஒவ்வொருவரும் விழித்தெழவேண்டும்.

— தாய் தேசத்தின் குரல்





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கலம் 34இல் சக-ஒடிகளின் "தூண்டிலின் போக்கு" பற்றிய பார்வையில் 'தூண்டில் எல்லா இயக்கங்களையும் நிராகரிக்கிறது. ஆனால் பிரச்சினைக்கு எந்தத் தீர்வும் இல்லை' என்று விமர்சனம் எழுவதாகக் குறிப்பிட்டுள்ளார்கள்.

மனித உரிமை மீறல்கள், மக்களின் ஜனநாயகம் பறிக்கப்படுதல், ஆகியவற்றையே இந்த இயக்கங்கள் முதன்மையாகச் செய்யும் போது தான் இவை நிராகரிக்கப்படுகின்றன. இந்த நிராகரிப்புடனேயே ஒரு தீர்வும் சொல்லப்படுகின்றது. மனித நேயத்திற்கு முன்னுரிமை கொடுக்கபடவேண்டும் என்பதே அது.

அடுத்து பாதகமான அம்சங்களை மட்டுமே பார்ப்பதாகவும் விமர்சனம் எழுந்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்கள். இலங்கையில் நடக்கின்ற சாதகமான சம்பவங்களை நேரடியாக அனுபவிப்பதற்கான சந்தர்ப்பக் குறைவினாலும், இவை செய்திகள் என்று கிடைக்கின்ற போது இயல்பாகவே எழுகின்ற சந்தேகம் தொடர்ச்சியாக வெளிநாடுகளில் அகதிகளாக இருப்பவர்களிடையேயிருந்து கொண்டுதானிருக்கும்.

மேலும் ஆட்சியிலிருப்பவர்கள் மட்டுமே தங்கள் ஆட்சிக்குட்பட்ட பிரதேசங்களைப் பற்றிய சாதக-மான செய்திகளைத் தந்து கொண்டிருப்பவர்கள். ஆனால் அவர்களால் ஆளப்படுபவர்களின் நேரடி அனுபவங்களைக் கேட்கின்றபோது பாதகமான செய்திகளே விஞ்சி நிற்பது ஒருவகையில் முற்போக்காகப் பார்க்கப்படலாம்.

தமிழர்களின் இக்கால மனோ வளர்ச்சியில், கடந்தகாலச் சரித்திரக் காரணிகளூடாக யாவற்றுக்கும் ஓர் உடனடித் தீர்வு வைக்க வேண்டும் என்ற மனோநிலையும், தனி மனிதர்கள், ஜனநாயகப் பண்புமிக்கவெகுஜன ஸ்தாபனங்கள் தவிர்த்து போராட்டத்தை ஆயுத ரீதியாக முன்னெடுக்கின்ற ஓர் இயக்கமே இன்னோர் இயக்கத்தை அல்லது ஒட்டுமொத்தமான இலங்கை நிகழ்வுகளை விமர்சிக்க அருகதையுடையது

# தூண்டிலின் போக்கு பற்றி

www.tamilarangam.net

என்ற மறைமுகமான நிர்ப்பந்தச்-சிந்தனையும் மேலோங்கிநிற்கின்றன

இது தொடர்ச்சியாக தமிழ் இனத்தின் தேசிய விடுதலைப் போராட்டத்திலும், இலங்கையில் புரட்சி பற்றிய நிகழ்வுகளிலும் மக்கள்போராட்டத்தை மறுதலிக்கும் சிந்தனையாகும். இதற்கு சக-ஓடிகள் எழுதியிருப்பதைப் போன்று மக்களின் பங்களிப்பு பற்றிய தெளிவான பார்வையின்மையே ஒரு காரணமாக அமையலாம்.

மேலும் தனிநபர்வாதப்போக்குகள் மேலோங்கி நிற்கிற ஒரு சமூகத்தில் போராட்டங்களுக்கும், அனுபவங்களுக்கும் ஊடான கற்றலிலிருந்து தீர்வுகளைப் பெற்றுக் கொள்வதிலும் பார்க்க, ஒரு தலைமையின் - தனிநபர்களின் - தீர்வை ஏற்றுக்கொள்கிற மனோநிலை இன்னமும் இருந்துவருகிறது. இது தமிழர்விடுதலைக்கூட்டணியினர் பாராளுமன்றத்திற்குள் தனிநாடு காண்பதாகப் பிரச்சாரம் செய்து ஏமாற்றியதிலிருந்து வித்தியாசமானதல்ல.

அந்நியநாட்டில் இருந்து இலங்கையில் நடைபெறுகின்ற ஒவ்வொரு பிரச்சினைக்கும் தீர்வுகளை சொல்லிக்கொண்டு பத்திரிகை வெளியிடும் "அதி மேதாவித்தனப்போக்கு" பெரும்பாலும் இயக்கப் பிரச்சார ஏடுகளுக்கு அவசியமானதாயும், எளிதாயுமிருக்கலாம். ஆனால் மனித இறைமை ஊறுபடுத்தப்படுவதற்கு எதிராகக் குரல் கொடுக்கின்ற ஒரு சஞ்சிகைக்கு இது முடியாத காரியமாகும்.

புலி எதிர்ப்பு அல்லது இயக்கங்களை எதிர்த்தல் என்பது ஏன் உருவாகிறது?

இராணுவரீதியான அக்கிரமங்களைச் செய்யும் அனைத்து இயக்கங்களுக்கும், அரசுக்கும் எதிரான குரலாக தூண்டில் இருப்பதால் - துரதிஷ்டவசமாக ஈழ விடுதலைப் போராட்டத்தில் பெரும்பாலான இயக்கங்கள் இதற்குள் அடங்கியுள்ளமையால் - அந்தந்த இயக்கம் சார்ந்தவர்களினதும், ஆதரவாளர்களினதும் எதிர்ப்பை தூண்டில் சம்பாதித்துக்கொள்கிறது.

வெளிநாடுகளில் அதிகமாக அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடும் இயக்கத்தவர்கள் தங்கள் திணிப்புகளை, தங்கள் இயக்கம் பற்றிய கற்பனுவாத புலுடாக்களை தூண்டில் உடைத்து வருவதால் வெளிநாட்டிலேயே பாரிய எதிர்ப்பை தூண்டில் எதிர்நோக்கிக் கொண்டிருக்கிறது.

பெரும்பாலான மக்கள் ஏனோதானோவென்று இருப்பதால், அதிவீர சாகசச் செயல்களுக்கு-ஆராய்வின்மையால்-முக்கியத்துவம் கொடுத்துக்கொண்டிருப்பதும், அந்நியச் சூழலில் இலங்கையில் மாறிக்கொண்டுவரும் முதலாளித்துவ சமூகத்தின் சமூகச்செயல்களை கலாச்சாரம், பண்பாடு என்று வளர்த்துக்கொண்டிருப்பதுமான போக்கிலிருந்தே" இயக்கங்களை ஏன் எதிர்ப்பான்?" என்ற விமர்சனம் எழுகிறது.

எந்தவிதமான அரசியல் நடவடிக்கைகளிலும் தூண்டில் ஈடுபடவில்லையென்று பார்த்திருக்கிறார்கள் அரசியல் நடவடிக்கை என்பது உட

www.tamilarangam.net

னடியாக ஒரு கட்சியமைத்தல் அல்ல. வெளிநாடுகளிலிருந்து கொண்டு இயக்கங்களுக்குப் பணம் சேர்ப்பதுமல்ல. போராட்டத்திற்கு போலியான அறைகூவல் விடுவதுமல்ல. ஆககூடியது இலங்கையின் குறைந்தபட்ச உண்மைகளைத்தானும் வெளியுலகிற்கு கொண்டுவருவதே ஒரு சஞ்சிகையின் நியாயமான அரசியல் நடவடிக்கையாகும். இது தூண்டில் 'தென்னாசிய நிறுவனத்திலிருந்து' வெளிவருவதால் ஓரளவுக்கு நிவர்த்தி செய்யப் படுகிறது.

எனவே பெரும்பாலும் போராட்டத்தையும், இயக்கங்களையும் விமர்சித்தலை "தூய்மை வாதம்" "எதிர்புரட்சித்தன்மை" என்று இயக்கவிரும்பிகளினால் முத்திரை குத்தப் படுவது நிகழ்ந்துவிடுகிறது.

தூண்டிலின் போக்கு பற்றிய சக-ஓடிகளின் பார்வையில் விமர்சனங்களின் பகுப்பாய்வையடுத்து அவ் விமர்சனங்கள் தோன்றியதற்கான அடிப்படைகளை ஆராய்ந்திருந்தமையுடன் பெரும்பாலான வெளிநாட்டு வாசகர்களுக்கு உடன்பாடு இருக்கும். அதேவேளை இந்த விமர்சனங்கள் ஏன் எழுகின்றன? என்று நான் முதலில் குறிப்பிட்டவற்றையே இலங்கையிலிருந்து சக-ஓடிகளும் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார்கள் என்றே நினைக்கின்றேன்.

யார் என்ன தவறு செய்தாலும் தவறுதான், இதை நக்கீரம் என்று சொல்லலாம். இது தூய்மை வாதம். இத் தூய்மைவாதம் சார்பற்றநிலை ஒன்று சாத்தியமானது என்று நம்பியதென சக-ஓடிகள் குறிப்பிடுவதை ஏற்கமுடியவில்லை.

தவறு என்பது வெறுமனே மனிதக்கொலைகளை கண்டிப்பதன் மூலமே சொல்லப்படுகிறதென்று தூண்டில் மீதான இவர்கள் பார்வைக் குறுக்கத்தைக் காட்டி நிற்கிறது.

வரலாறு என்பது மன விருப்பப்படி இயங்காமல் சமூக, சக்திகளுக்கிடையேயான போராட்டத்தினால் நிர்ணயிக்கப்படுவதுதான். ஆனால் சமூக சக்திகளின் போக்கை நிர்ணயிக்கத் தவறும் தவறினைக் கண்டு கொள்வது பிரதானமானது. தவறுகளைச் சுட்டுகின்ற விமர்சனப்போக்கினைக் குதர்க்கமாகவும், விரோதமாகவும் எடுத்துக் கொள்கின்ற இராணுவப் பாங்கே எம்மத்தியில் நிலவுகின்றது.

செயற்பாடுகள் இல்லாதவர்கள் தவறுகள் செய்யாதிருக்கலாம் தவறுகளை ஏற்றுக்கொள்ளாமை, தவறுகளைச் சுட்டிக் காட்டாமை என்பவற்றையே நான் தூய்மைவாதம் என்று விளங்கிக்கொள்கிறேன்.

மேலும், அரசியல் லாபம் தேடாமையும், இயக்கப் பத்திரிகையாக வெளிவராமையும் ஒரு சஞ்சிகையைச் சார்பற்றது எனச்சொல்லப் போதுமானவையல்ல. தூண்டிலைப் பொறுத்தவரை அரசுக்கும் போராட்ட இயக்கங்களுக்கும் இடையிலான தெளிவான பார்வை எப்போதும் முன்வைக்கப்பட்டிருப்பதாகவே எனது வாசனை ஞானத்தில் கண்டுகொள்கின்றேன்.

இலங்கை-இந்திய ஒப்பந்தத்தினையடுத்து இந்திய ஏகாதிபத்தியத்தினை ஆதரித்த சக்திகளுக்கும், சந்தர்ப்பவசமாக எதிர்த்த சக்தி

www.tamilarangam.net

களுக்கும் இடையிலான தூண்டிலின் வித்தியாசங்கள் பாசிசப் போக்குகளை மறந்துவிடக்கூடாது என்ற அக்கறையிலிருந்து தெளிவு படுத்தப்படவில்லை என்பதே தூண்டில் பற்றிய எனது பார்வை.

மேலும் இங்கு வெளிவரும் இயக்க, இயக்க ஆதரவு சஞ்சிகைகளினால் வெளிநாடுகளில் உள்ளவர்கள் திருப்திப்படுகின்றனரே தவிர, சிந்தனை சக்தியையோ, திறந்த விவாதத்தையோ வளர்த்தெடுக்க முடியாதுள்ளனர்.


தேசிய விடுதலைப் போராட்டத்திலிருந்து வெளிக்கிளம்பிய சக்திகள் ஈழத்திலிருக்கின்ற, போராட்டத்தின்பால் அக்கறைகொண்ட மக்களுக்கு போராட்டத்திற்கான புதிய பரிமாணங்களைச் சேர்ப்பதற்கும், நாட்டிலே இருப்பவர்கள் அங்கு நடப்பவைகளை கண்டுகொள்ள சந்தர்ப்பம் இல்லாத பட்சத்தில் அவற்றைக் கண்டுகொள்ள வைப்பதற்கும் உதவுவதன் மூலமும் தமது பங்களிப்பைச் செய்யலாம்.

தனியாக கலை, இலக்கியஏடு அரசியல் சார்பற்றது அல்லது மறைமுக அரசியல் வக்காலத்து ஏடு ஆட்சேர்ப்பு ஏடுகள் என்று இங்கு வெளிவருவனவற்றிலிருந்து தூண்டிலை பிரித்துப் பார்க்கவேண்டிய பொறுப்பு இங்குள்ள வாசகருக்கு இருக்கிறது.

வே. கண்ணன்

(தொடர்ச்சி 23 ஆம் பக்கம்)

## நூல் அறிமுகம்




தொடர்புகளுக்கு

THEDAL
P.O.Box. 1031
Station "F"
Toronto, M4Y 2T7
Ontario
Canada



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# புறநானூறு

நான் தனிமையில்.
தூரத்தில்
அடர்ந்த கிளைத்த மரத்தில்
குருவிகள் முத்தமிட்டபடி.
வானத்தில்
நீண்ட குளிர்காலம்
சிறை வைத்திருந்த சூரியன்
பூமிக் காதலியை
ஆர்வமாய் தழுவ,
பூமி நாணும் மாலை நேரம்.

கைகள்
புத்தகப் பக்கங்களை
மெல்லப் புரட்டியது.
புறநானூறு!

கவிதைக் கல்வெட்டுக்களில்
கொட்டி முரசிடும்
கொலை வரலாறு.

மனிதனை மனிதன் கொன்றதற்கும்,
காடுகழனிகள் அழிந்ததற்கும்
வாழ்த்துப்பா.

சிரசை அறுத்து,
கண்ணைப் பிடுங்கியதற்கும்,
கண்ணைப் பிடுங்கி,
சிரசை அறுத்ததற்கும்
உவமான, உவமேயத்துடன்
கவிதா ஆலாபனைகள்.

www.tamilarangam.net

சிந்தனையில் சிறுகீறல்.
இது
தமிழர்களின் வீர-யுக-இலக்கியம்.
எப்படி இருக்க முடியும்?
அழிந்ததும் அவரே.
அழித்தவரும் அவரே.
எங்கோ தவறு நடந்திருக்கின்றது.

தமிழ்.. தமிழ்... என்பது
மக்களை
அடிமை செய்ய நினைப்பவர்களின்
முகமூடி.

போர்..
பூமியை, வளங்களை
பங்குபோட, மக்களை அடிமைசெய்ய
ஆண்டான்கள் செய்யும்
வாழ்க்கைக் கொலை.

உலகத்தின்
ஒவ்வொரு திசையிலும்
ஓராயிரம் ரத்தப் புறநானூறுகள்.

சூரியனைப் பார்த்தேன்.
விடைபெறப் புன்னகைத்தான்.

வீரம் என்பது
மக்களின் வாழ்விற்காய்
மக்களால் செய்யப்படவேண்டியது
என்று.. ஏங்கிக் கத்தினேன்.

இரா. சத்தியன்

www.tamilarangam.net

எழுத்திலிருந்து :

# தேசத்தின் குறிப்புகள்

பிரஜைகள்

மட்டக்களப்பிலிருந்து வந்த எனது எழுத்தாள நண்பர் ஒருவரை தற்செயலாக கொழும்பில் சந்தித்தேன். புத்தகக் கடை ஒன்றில் நின்றபடி பத்திரிகைகளை புரட்டிக் கொண்டிருந்தார்.

"எப்பிடி வந்து சேந்தியள்? பிரச்சனைக்க மாட்டுப்படேல்லையோ?" என்று கேட்டபடி அவர் பார்த்துக் கொண்டிருந்த பத்திரிகைகளை நானும் நோட்டம் விட்டேன்.

யாழ்ப்பாணத்திலிருந்தோ, மட்டக்களப்பிலிருந்தோ வருகின்ற வாசிக்கின்ற ஆர்வமுள்ள எந்த நபரும் வாயைப் பிளந்தபடி தயங்கி நிற்கிற இடம் இருக்குமானால் அது இந்தப் புத்தகக் கடைதான். இவை உண்மையில் புத்தகக் கடைகள் அல்ல. பத்திரிகைகள், சஞ்சிகைகளும் விற்கிற வேறு வேறு ரகமான கடைகள்.

மட்டக்கிளப்பிலும் யாழ்ப்பாணத்திலும் படிப்பதற்கு பஞ்சாங்கத்தை தவிர வேறெதுவும் கிடையாமல் பங்கருக்குள் நாள் முழுக்க இருந்து அவஸ்தைப்பட்டுவிட்டு வருகிறவர்களுக்கு புத்தகக்கடைகளில் சுதந்திரமாக இப்படி தூங்குகிற பத்திரிகைகளைப் பார்ப்பதில் இருக்கும் ஆர்வம் சொல்லும் தரமற்றது.

யாழ்ப்பாணமாவது பரவாயில்லை. உதயன், முரசொலி, ஈழநாதம், ஈழநாடு என்று நான்கு பத்திரிகைகள் வருகின்றன.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

யாழ்ப்பாணத்து மக்களுக்கு றேடியோவோ, ரெலிவிசனோ மற்றும் தொடர்பு வசதிகளோ இல்லாத வேளையில் இந்தப் பத்திரிகைகள் பொய்யோ மெய்யோ எதையாவது எழுதிக் கொண்டிருப்பதால் ஒவ்வொரு நாளும் படிக்க ஏதாவது அவர்களுக்கு இருக்கும்.

சலிப்பூட்டும் விதத்தில் வீரமரணங்களும், அஞ்சலிகளும், இராணுவத்தின் தோல்வியும் எழுதப்பட்டிருப்பினும் கூட பஞ்சாங்கத்தை படிப்பதை விட அவைகள் மேல் அல்லவா?

ஆனால் மட்டக்களப்பிலோ அதை விட்டால் வேறு ஒன்றுமேயில்லை. எப்போதாவது இலங்கை இராணுவம் வானத்திலிருந்து ஏதாவது துண்டுப்பிரசுரம் போட்டால் அல்லது முகாமிலிருந்து ஏதாவது பிரசுரங்களை விநியோகித்தால் தான் உண்டு. மற்றப்படி செவி வழி செய்தியாகத்தான் மக்கள் தமது அறிவைப் பெருக்கிக் கொள்ள முடிகிறதாம்.

இந்த விசயம் ஏற்கனவே எனக்குத் தெரிந்திருந்ததால் நண்பர் புத்தகக் கடை அருகில் நின்றது எனக்கு வியப்பளிக்கவில்லை.

சமீப காலங்களில் நானும் இந்த வீதியால் போகும் நேரமெல்லாம் இப் புத்தகக் கடைகளருகில் யாராவது நிற்கிறார்களா என தேடுவதை வழக்கமாக்கிக் கொண்டிருந்தேன். றெயில்வே ஸ்டேசன், அகதிமுகாம், லொட்ஜ் போல இந்த மாதிரி சந்திப்புகட்கு புத்தகக் கடைகளும் பிரபல்யமாகி இருந்தன.

எனது கேள்விக்கு பதிலளிக்காமலே சிரித்தபடி நண்பன் என்னைப் பார்த்தான். அவரது பார்வையிலேயே முழு விசயங்களையும் ஒரேயடியாக தெரிவித்து விடுகிறதான ஒரு உணர்வு இருந்தது.

"என்ன சிரிக்கிறீங்கள் எப்பிடி இஞ்சாலை வந்தியள்?

"வந்தது பெரிய கதை, அதைவிடவும் பெரிய கதை நான் தப்பிப் பிழைச்சது, அதை விடப் பெரிய கதை நம்பி ஏமாந்தது"

"யாரிடம் ஏமாந்தது?" நான் இடைமறித்துக் கேட்டேன். "புலிகளிடம், முஸ்லிம்களிடம் ஏன் எல்லாரிடமும் தான்"அவரது குரலில் விரக்தி தொனித்தது.

"எனக்கு விளங்கவில்லை" என்று கேட்டேன் நான்

இப்போது நாங்கள் தெருவிலைப் பக்கமாக நடந்து கொண்டிருந்தோம். இப்படி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நண்பர்களை சந்தித்து பேச தொடங்கியதும் எனக்கு எப்போதும் இரண்டு பொருட்கள் தேவைப்படும். ஒன்று சிங்களக் கடை (சைவக் கடையல்ல)பிளேன் ரீ மற்றது சிகரட்.

இருவருமாக கடையொன்றில் நுழைந்தோம். நண்பர் உரையாடலைத் தொடர்ந்தார்.

"புலியள் ஆமி வரும் வரை தாங்கள் பாதுகாப்பு தருவம் எண்டு சொல்லிக் கொண்டிருந்தாங்கள். சண்டை தொடங்கி ஆமி 'மூவ்' பண்ணத் துவங்கினதும் சொல்லாமல் பறையாமல் தாங்கள் உடனே 'விற்றோ' பண்ணிட்டாங்கள். போனவங்கள் சும்மா போகவும் இல்லை. பக்கத்து முஸ்லிம் கிராமங்களை போய் அடிச்சு மிரட்டி கப்பமும் கேட்டுக் கொண்டு போனாங்கள்.

ஆமியள் வந்தால் அங்கங்கை காம்ப் போட்டிட்டு இருப்பாங்கள், சண்டை நடக்கும் எண்டு நாங்க நினைச்சம். ஆனா அது நடக்கவே இல்லை. ஆமியள் புலியள போகவிட்டிட்டு முஸ்லிம் ஆக்களையும் கூட்டிக் கொண்டு வந்து வீடு வீடா புகுந்து ஆக்களை அள்ளிக் கொண்டு போனாங்கள். எத்தினையோ பேரை உயிரோடை கொழுத்தினாங்கள். கண்ணுக்கு முன்னால கதறக் கதற இழுத்துக் கொண்டு போனாக்களை கழுத்தை வெட்டிச் சாக்காட்டினாங்கள்."

"அப்ப புலியள் ஒண்டும் செய்யேல்லையே?"

"அவங்கள் எங்கை? அவங்கள் காட்டுக்க ஓடிட்டாங்கள். பிறகு முஸ்லிம்கள் காட்டிக் குடுக்கிறாங்கள் அதை நிப்பாட்ட வேணுமெண்டு சொல்லிக் கொண்டு காத்தாங்குடி, ஏறாவூரிலை முஸ்லிம்களை மசூதிக்க வச்சும் சுட்டுத் தள்ளினாங்கள். இது நிலமையை இன்னும் மோசமாக்கியிட்டுது.

இப்ப வாழைச்சேனையில இருந்து மட்டக்களப்பு வரை ஒரு தமிழ் சனமும் இல்லை. வழியெல்லாம் ஆக்களை இறக்கி வெட்டித் தள்ளினாங்கள். முஸ்லிம் மக்களின்ர நோக்கமே மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களில இருந்து தமிழனை அடிச்சுக் கலைக்கிறதுதான்.

திட்டமிட்டு தமிழன்ர சொத்துக்களை பறிச்சு பறிச்சு வந்தவன், இப்ப ஆமியோடை சேந்து கொண்டு எல்லாரையும் அடிச்சுக் கலைக்க வெளிக்கிட்டாங்கள். இஞ்சத்தைய பேப்பர்களில எல்லாம் முஸ்லிம்கள் மீதான தாக்குதல் பற்றி எழுதின அளவுக்கு தமிழ் சனத்தின்ர அழிவைப் பற்றி எழுதேல்ல. என்னை பொறுத்தளவில

www.tamilarangam.net

செத்த முஸ்லிமை விட தமிழ் சனம் தான் கணக்க எண்டு நினைக்கிறன்.

நான் மௌனமாக எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டிருந்தேன். அவருடைய அநுபவம் ஏற்படுத்தியுள்ள பாதிப்பு எவ்வளவு மோசமான விதத்தில் பேச வைக்கிறது! ஒரு சமுகத்தின் மீதே அதிருப்தியும் வெறுப்பும் ஏற்படிருக்கிறது என்று எனக்கு தோன்றியது.

அவர் தொடர்ந்தார்."தப்பித் தவறி பழையபடி இலங்கை அரசாங்கத்திற்கும் புலியளுக்கும் இடையில உறவு ஏற்படவேணும். அப்ப தெரியும் இவங்கட நிலை. மட்டக்களப்பு தமிழ் பொம்பிளையள் உலக்கையால அடிப்பாங்கள் இந்த முஸ்லிம்களுக்கு. அவ்வளவுக்கு அநியாயம் செய்தவங்கள் இவங்கள். நானும் இவ்வளவு நாளும் இன ஒற்றுமை அது இதெண்டு யோசிச்சனான் தான். ஆனா இப்பதான் தெரியுது அது சரி வராதெண்டு"

இந்த நண்பரின் உரையாடலுக்குப் பிறகு எனக்கு ஒரே குழப்பமாக இருந்தது. எனது அரசியல் நண்பர் முஸ்லிம் மக்கள் மீதான தாக்குதல் பற்றி வைத்திருக்கிற கருத்துக்களுடன் இது நடைமுறையில் முரண்படுவதாக இருக்கின்றதே என்று தோன்றியது. அவருடன் பேசினால் இது பற்றி கொஞ்சம் விளக்கமாக அறியலாம் என நினைத்துக் கொண்டு அவரிடம் போனேன்.

நண்பர் என்னவோ உற்சாகமான மன நிலையில் இருந்தார். நான் போனதும் உற்சாகமா வரவேற்று "என்னடப்பா கன நாளா காணவில்லை.

நான் நினைத்தேன் ஒருவேளை நீயும் மாவீரர் தினம் கொண்டாட போயிட்டாயாக்குமெண்டு" என்று கேட்டார்.

"மாவீரர் தினமா, அது என்ன? " என்று கேட்டேன் நான்.

நண்பன் கோபம் வந்தவரைப் போல் முகத்தை வைத்துக் கொண்டு, "நீ எந்த உலகத்தில இருக்கிறாய்? யாழ்ப்பாணத்து தெருவெல்லாம் தென்ன மரமும் தோரணமும் சிகரமும் சோடிணையுமாய் மாவீரர் தினத்துக்கு எல்லா ஆயத்தங்களும் அவசரமாய் நடக்குது. நீ இதைப் பற்றி தெரியாமல் இருக்கிறாய்" என்று சீறினார்.

"அடட அது தெரியும். நான் ஏதோ யோசினையில கேட்டிட்டன்.அதான். அதை கொண்டாட விடாம தடுக்க அரசாங்கம் ஊரடங்கு சட்டம் போட்டிட்டுதே."

www.tamilarangam.net

"ஊரடங்கு சட்டம் போட்டா என்ன? யுத்தமும் சாவும் நிறைந்த சூழலுக்குள் வாழப் பழகிக் கொள்ள வேணும் என்று புலிகள் அதை செய்யாம விடப் போகிறார்களா என்ன? அப்பிடி என்றால் எப்பிடி மாவீரர்கள் உருவாக முடியும்?"

"உன்ர கதையின்ர போக்கை சரியாகப் புரிந்து கொள்ள முடியவில்லை. நீ என்ன புலிக்கு சப்போட் பண்ணி கதைக்கிறியோ? எதிர்த்துக் கதைக்கிறியோ?"

"சப்போட்டும் இல்லை, எதிர்ப்பும் இல்லை. சனம் படுகிறபாட்டுக்கு இவங்கள் செய்யிற கூத்தை நினைக்க பத்திக் கொண்டு வருகுது. அதுதான் கதைக்கிறன். உனக்கு ஒரு கதை தெரியுமோ தெரியாது. நான் நேற்று யாழ்ப்பாணத்தால வந்த ஒருதரை சந்திச்சனான். அவர் சொன்ன கதையைக் கேட்ட பிறகு தான் இந்த மாவீரர் தினம் பற்றி வடிவா தெரிஞ்சுது"

"என்ன சொன்னார்?"

"மாவீரர் தினம் ஒரு வாரம் நடக்கப் போகுதாம். இதுக்கு யாழ்ப்பாண குடா நாடு முழுக்க பரவலாக சோடிக்கிற, சிகரம் கட்டிற வேலையள் தொடங்கியிட்டுதாம். யாழ்







www.tamilarangam.net

பல்கலைக் கழகம், பாடசாலைகள் எல்லாவற்றையும் திறக்கச் சொல்லி புலியள் சொல்லி அவை திறந்தாச்சாம். 8ம் வகுப்புக்கு மேல படிக்கத் தேவையில்ல எண்டதை தற்காலியமாக ஒத்திப் போட்டிருக்காம். பாடசாலைகளிலும் பல்கலைக்கழகத்திலும் மாவீரர் தினத்தை கொண்டாடவே இந்த ஏற்பாடாம்."

"அப்ப பழையபடி பள்ளிக் கூடங்கள் பூட்டப் படுமா?"

"அது எனக்கு தெரியாது. அவர் சொன்னதை சொல்கிறேன் கேளன். எல்லா பள்ளிக்கூட அதிபர்களுக்கும் ஒரு சுற்று நிருபம் வந்திருக்காம். அதன்படி முதலாவது மாவீரர் மறைந்த நேரம் இரவு பன்னிரெண்டு பத்தாம். எனவே இந்த வாரத்தின் முதல் நாள் அந்த நேரம் எல்லா ஆசிரியர்களும் மாணவர்களும் பாடசாலையில் கூட வேண்டுமாம்."

"என்ன இரவிலா?" ஆச்சரியமாக இருந்தது எனக்கு.

"கதையக் கேளாமல் இடையில குழப்பாதை. இரவு பன்னிரெண்டு பத்தென்றால் இரவில்லாமல் பின்னையென்ன பகலே? கூடி தேசியக் கொடியை ஏற்ற வேண்டுமாம்"

"தேசியக் கொடியோ?" என்றேன் நான்.

"ஓம். தேசியக் கொடி. ஆனால் ஆசிரியர்களுக்கும் எது தேசியக் கொடியென்று தெரிவிக்கவில்லையாம். இதனால் அவர்கள் புலிக் கொடி ஒன்றை ஏற்றுவதாக தீர்மானித்துள்ளார்களாம்.

இரவு கூடுபவர்கள் மெழுகுவர்த்தி ஏற்றி அஞ்சலி செய்ய வேண்டும். கொடியை அவ்வூரிலுள்ள யாராவது ஒரு மாவீரரின் தாய் அல்லது மனைவி தான் ஏற்ற வேண்டுமாம். எல்லா பாடசாலைகளிலும் ஆலயங்களிலும் இரவு பன்னிரெண்டு பத்துக்கு மணி அடித்து தமது அஞ்சலியை செய்ய வேண்டும். பாடசாலைக்கு வரும் ஆசிரியர்கள் வேட்டி நாஷனல் அணிந்தும், ஆசிரியைகள் வீரத்தைக் குறிக்கும் சிவப்பு அல்லது மஞ்சள் நிறப் புடவை அணிந்தும் வரவேண்டும்."

"சரிதான் ஆனால் கொடியேற்ற ஒரு மாவீரர் அவ்வூரில் இல்லையென்றால்?" என்று கேட்டேன் நான்.

"அப்படியென்றால் அது ஒரு பாவப்பட்ட பூமி என்று அர்த்தம். யாராவது அயல் கிராமத்தில் போய் அழைத்து வரவேண்டியது தான். இதோடு

www.tamilarangam.net

எல்லா தெருக்களுக்கும் மாவீரர்களின் பெயர் சூட்டுவதும் நடை பெற ஆரம்பித்துள்ளதாம்."

இதை சொல்லி விட்டு சிரித்த நண்பர் சொன்னார்.

"தெருக்களின் தொகையை விட மாவீரர் தொகை அதிகம் என்றால் பரவாயில்லை. தெருக்களைப் போட்டு விடலாம். ஆனால் தெருக்களின் தொகை அதிகம் என்றால் புதிதாக மாவீரர்களை உருவாக்க வேண்டியிருக்கும் என்பதுதான் சிக்கல்."

எனக்கும் சிரிப்பு வந்தது. கூடவே ஒரு சந்தேகம். இப்படி நாங்கள் கிண்டல் செய்வது சரியா? போராடுகின்ற மக்களும் இயக்கமும் இப்படி விழாக்களை நடாத்துவது தப்பா?

நண்பரிடமே அதையும் கேட்டு வைத்தேன்.

"அது சரி இதில என்ன தவறு இருக்கிறது என்று நினைக்கிறாய்?"

"தவறு இதிலே அல்ல. தவறு போராட்டத்திலேயே இருக்கிறது. போராட்டமே மக்கள் மீது பலவந்தமாக திணிக்கப்பட்ட பின் இவை மட்டுமென்ன இனி என்னென்னவோ எல்லாமோ திணிக்கப்படத்தான் போகிறது.

பிரச்சனை விழா கொண்டாடுவதல்ல, விழாவைத் திணிப்பதுதான். ஹர்த்தால் முதல் ஊர்வலம், உண்ணாவிரதம் வரை எல்லாவற்றையுமே திணித்து திணித்தே வளர்ந்த அரசியல் தானே இது. இது எல்லாவற்றையும் மக்களுக்கு மனதுக்கும் உணர்வுக்கும் பதில் மரக்கட்டை தான் இருக்கிறது என்று நினைத்துக் கொண்டு திணிக்கிற அரசியல்... அதுதான் எங்கடை பிரச்சனை..."

"சரி விடு நான் உன்னோட பேச வந்த விசயமே வேறை. மட்டக்களப்பு நிலமை பற்றி நான் கேள்விப் பட்டதைப் பற்றி பேசத்தான் வந்தனான்."

"என்ன விசயம்"

"மட்டக்கிளப்பில முஸ்லிம்கள் செய்த அநியாயத்தைப் பற்றி எனக்கு ஒராள் சொன்னார். அதைக் கேட்டால் நாங்கள்

முஸ்லிம்களைப் பற்றி கதைக்கிறதைப் பற்றி திரும்ப யோசிக்க வேணுமோ என்று நினைச்சன்".

"தெரியும் மட்டக்களப்பில முஸ்லிம்கள் தமிழரை வெட்டிக் கொண்டது எரிச்சது கற்பழிச்சது என்று சொல்லியிருப்பார் அதுதானே."

"நீ இவ்வளவு லேசா எடுக்கிற



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மாதிரி இல்லை அங்கை விசயம்."

"உண்மைதான். நானும் மட்டக்களப்பிலை இருந்து வந்தாக்களோட கதைச்சனான். அங்கையிருந்து வந்த தமிழாக்கள் சொல்லிறதைப் பார்த்தால் முஸ்லிம்களை வெட்டவேணும் அழிக்க வேணும் என்றுபடும். முஸ்லிம்களோட கதைச்சால் புலியளின்ரையும் தமிழாக்களின்ரையும் அநியாயங்கள் தெரியும். இரண்டு பக்கமுமுள்ள சாதாரண மக்கள் தான் உண்மையில இந்த பிரச்சனையில பாதிக்கப்பட்டாக்கள். புலியளும் அவையின்ர வாலுகளும் மாட்டுப்பட்டு செத்தது ஒரு பத்து வீதம் கூட வராது.

அதே மாதிரிதான் முஸ்லிம் மக்களில் தமிழ் கடைகளை நொருக்கியும் தமிழாக்களை வெட்டி சாக்காட்டியவர்களோ அவர்களின் ஆதரவாளர்களோ புலிகளால் தாக்கப்படவில்லை. அப்பாவிகள் தான் கொல்லப்பட்டிருக்கிறார்கள். இந்த இடத்தில எங்களுக்கு சம்பவங்கள் முக்கியமல்ல, அதுக்கு பின்னால இருக்கிற போக்குத்தான் முக்கியம்."

"எனக்கு விளங்கேல்லை".

"புலிகள் காத்தான்குடியில் செய்த படுகொலைக்கு முன்பாக முஸ்லிம்கள் சிலரது ஆதரவுடன் *S.T.F* தமிழர்களைக் கொன்றது, உயிருடன் போட்டு எரித்தது எல்லாம் உண்மை. ஆனால் முஸ்லிம்கள் மத்தியில் ஒரு சில தீய சக்திகளின் இனக்குரோத நடவடிக்கையை காரணம் காட்டி முஸ்லிம் மக்களுக்கெதிராக புலிகள் நடாத்தும் தாக்குதலை எப்பிடியும் நியாயப்படுத்த முடியாது.

இது கொழும்பில் சிங்கள பேரினவாதிகளும் அரசாங்கமும் சேர்ந்து தமிழர்களை அடித்துக் கலைத்தது போல அல்லாமல் வேறென்ன? இப்போது அவர்கள் யாழப்பாணம் மன்னார் பகுதிகளிலும் இருந்து முஸ்லிம்களை விரட்டியுள்ளார்கள்.

சில முஸ்லிம்கள் இப்படி தமிழ் இயக்கங்களை காட்டிக் கொடுப்பதற்கும் கூட ஒரு வரலாறு உண்டு. இந்த இயக்கங்களின் கண்மூடித்தனமான நடவடிக்கைகள் தான் இதற்கு காரணம். அவர்கள் இவர்களை தங்களது தலைவர்களாக நம்பமுடியாத அளவுக்கு இவர்களது நடவடிக்கை இருந்து வந்துள்ளது. தங்களிடம் ஆயுதம் இருப்பதாலேயே தம்மை எசமானர்கள் என மதிக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்புடன் முஸ்லிம் மக்கள் மத்தியில் போனவர்களை அவர்கள்

www.tamilarangam.net

எப்படி தலைவர்களாக ஏற்க முடியும்..

மட்டக்களப்பில் முஸ்லிம் ஊர்காவல் படையாலும் பிற இனவாத சக்திகளாலும் கொல்லப்பட்ட தமிழர்களின் தொகை அதிகம் தான். அரசும், அரசு சார்ந்த பத்திரிகைகளும் இதை மூடி மறைப்பதும் உண்மைதான். ஆனால் இதை விடவும் முக்கியமானது தமிழர் தேசியவாதம் தமிழ் இனவாதமாகவும், பேரினவாதமாக மாறிவருவதும் அது முஸ்லிம் மக்களுக்கு எதிர் காலத்தில் மாபெரும் அச்சுறுத்தலாக இருக்கப் போவதும் தான். மட்டக்களப்பை விட்டு தமிழர்களை விரட்டுவதற்கு முஸ்லிகள் முயல்வார்கள் என்பது தமிழ் இனவாதத்தின் மிகைப்படுத்திய ஒரு காரணம் - தமது செயலை நியாயப்படுத்த சொல்லும் கருத்து. முஸ்லிம்களினால் செய்யப்பட்ட கொலை நடவடிக்கைகளை நாம் புரிந்து கொள்ள முயல வேண்டும். அதனால் ஆத்திரமுட்டப்பட்டு பதில் நடவடிக்கை எடுக்க முனைவது தமிழ் இனவாதிகளுக்கு மட்டுமே லாபம் தரும்."

"ஆனால் மட்டக்களப்பிலிருந்து வரும் தமிழர்கள் அப்படி நினைக்கவில்லையே?"

"நினைக்கவில்லை என்பது உண்மை தான். உடனடியாக அவர்களால் அப்படி நினைப்பதும் சாத்தியம் இல்லை தான். ஆனால் காலம் அவர்களை அப்படி நினைக்க வைக்கும். ஏனென்றால் அதுதான் அவர்களுக்கு தேவையாக உள்ளது. கண்ணுக்கு முன்னால் தன் குடும்பத்தின் அங்கத்தவர்கள் அனைவரையுமே பறி கொடுத்த ஒருவன், முழு முஸ்லிம் சமுதாயத்தையுமே அழிக்கப் போவதாக சொல்வது புரிந்து கொள்ளக் கூடியது. ஆனால் அது ஒருபோதும் முழு சமுதாயத்திற்குமே தீர்வாகி விடாது. உண்மையில் மட்டக்களப்பு மக்கள் ஆத்திரப் படவேண்டியது முஸ்லிம்கள் மீதல்ல, புலிகள் மீதும் தமிழ் இயக்கங்கள் மீதும். இவர்கள்தான் போராட்டத்தைச் சிதைத்தவர்கள், மக்கள் மீது சவாரி செய்பவர்கள்..."

"ஆனால் இது பெரும் பிரச்சனையை ஏற்படுத்தாது என்று நினைக்கிறாயா?"

"இவை நினைக்க முடியாதவை. காலம் எப்படி நகரப் போகிறது என்பதை பொறுத்தவை. முஸ்லிம் மக்களின் தனித்துவம் அங்கீகரிக்கப்பட்டு அவர்களின் அரசியல் மற்றும் அதிகாரப் பகிர்வுகள் சரி செய்யப்பட்டால், இதற்கு தமிழர் கட்சிகள் மனப்பூர்வமாக

www.tamilarangam.net

உழைத்தால் நிலமை மாறலாம், அல்லது பிளவு மேலும் பெருகலாம். ஆனால் தமிழ் மக்களினதும் சரி முஸ்லிம் மக்களதும் சரி எதிர்கால நலன் ஐக்கியத்திலேயே - பரஸ்பர புரிந்துணர்வுடனான ஐக்கியத்திலேயே-தங்கியுள்ளது. ஆனால் இப் புரிந்துணர்வு முந்தி ஒருதரம் உனக்கு சொன்னது போலவே 'அங்கீகாரம்' சம்பந்தப் பட்டது."

நான் மௌனமாக யோசித்துக் கொண்டிருந்தேன். உடனடியாக எந்தப் பதிலும் சொல்ல முடியவில்லை.

[redacted]

<u>தவறு</u>

கலம் 35இல், 'அதிகார மாற்றத்திலிருந்து' என்ற கட்டுரையில், பக்கம் 50இல், '..சேர். பொன். இராமநாதனின் ஐம்பதுக்கு ஐம்பதிலிருந்து...' என்று குறிப்பிடப்பட்டிருப்பது தவறான தகவலாகும். ஐம்பதுக்கு ஐம்பதை முன்வைத்தவர் ஜி. ஜி பொன்னம்பலம் என்பதே சரியானது.

தவறான தகவலைப் பிரசுரித்தமைக்காகவும், இத் தவறை வாசகர்கள் எவரும் சுட்டிக்காட்டாமைக்கும் வருந்துகிறோம்.

— கடலோடிகள்

## மலையக இலக்கியமும் புலி இயக்கமும்!

"ஆட்சி நடத்தும் அதிகார பீடத்தினரது தருக்க நெறிக்கும், போராளிக் குழுக்களது தருக்க நெறிக்குமிடையே பயங்கரமான ஒற்றுமை காணப்படுகிறது. இரு சாராரும் குறிக்கோளை எய்துவதற்கு எந்த வழியையும் பின்பற்றலாம் என்ற கோட்பாட்டில் நம்பிக்கையுடையவர்கள்.." என றெஜி சிறீவர்த்தன குறிப்பிடுவது வெறும் கோட்பாடல்ல என்று 09.12.90இல் பரிஸில் நடைபெற்ற என். எஸ். ராமையாவின் நினைவுப் பேருரைக்கூட்டத்தில் 'மலையக இலக்கியம் ஒரு அவசரப் பார்வை' எனும் பொருளில் மு. நித்தியானந்தன் உரையாற்றும்போது பரிஸ் புலிகளால் சத்தியமாக்கப்பட்டது.

22.09.90 அன்று 'இன்றைய விமர்சனச் சூழலும் ராஜனி திராணகமவும்' எனும் பொருளில் — பேராசிரியர் நித்தியானந்தன் உரையாற்றும்போது கூட்டத்தில் கலந்துகொண்ட மக்களை அவமதித்து, இடையூறு விளைவித்த புலிகளின் பரிஸ் கிளையினர் என். எஸ். எம். ராமாயாவின் நினைவுப் பேருரைக்கூட்டத்தில் கூட்டம் ஆரம்பிக்க முதலே

www.tamilarangam.net

இடையூறு விளைவித்து, இறுதியில் எம் தோழர் முரளி தாக்கப்பட்டார்.

அருவருப்பான காடைக் கும்பலைக் கருத்தின் பலத்தால் மட்டும் எதிர்கொள்வது மிகவும் சிரமமானதாக இருந்தது.

"போராளிகள் செத்துக் - கொண்டிருக்கும்போது ராமையாவின் கூட்டம் போராட்டத்தைத்திசை திருப்புகிறது" என ஆரம்பித்த இக் கும்பல் ராமையா யார் என்று இதுவரை அறிந்திருக்க நியாயமில்- லைத்தான்.

வந்த காடையர்களில் ஒரு பகுதியன்ர் ராமையா இலங்கையில் தங்களுடைய ஆட்களால் சுட்டுக் - கொல்லப்பட்டிருக்கலாம் என்ற நம்பிக்கையில் வந்தவர்களாக காணப்பட்டனர். போராட்டத்தை வாழ்த்திப் பாடாமல் தோட்டக் காட்டைப் பற்றிக் கதைக்க வெளிக்கிட்ட நித்தியானந்தன் அவர்களுக்கு எரிச்சலுக்குரியவாராக மட்டும் இருக்கவில்லை.

மூடத்தனத்தையும், குறுகிய பிரதேச வெறியையும் இனங்காட்டும் பேருரை ஆயுத சிந்தனையால் நிரப்பி இறுக்கி அடைத்துவிடப்பட்ட மண்டைகளுக்கு ஆயிரம் சம்மட்டிக- ளால் ஓங்கியடித்துக் கொண்டிருந்தது தெளிவாகத் தெரிந்தது.

யாழ்ப்பாணப் பிராந்திய எல்லைக்குள்ளேயே சகல சமூக, இலக்கியச் செயற்பாடுகளையும் பார்த்து, அதுவே சகலதும் என்று பழகிப்போன எங்களுக்கு இந்தப் பேருரை எங்களுக்குப் பரிச்சயமில்லாத ஒரு புதிய சமூக, இலக்கியப் பிராந்தியத்திற்கு எங்களை இட்டுச் சென்றது.

நித்தியானந்தன் ஆற்றிக்கொண்டிருந்த உரை விரிந்த விசாரணைக்குள்ளாக்கப்படவேண்டியதும், பல ஐயங்களை எழுப்பவோ அல்லது அது தொடர்பான பல கருத்தாடல்களைத் தொடர்ந்திருக்கவோ வாய்ப்பான இம் மண்டபத்தில் தெருச்சண்டித்தனத்திற்குப் பழக்கப்பட்டுப்போனவர்களால் பாதியில் முடிந்துபோனது துரதிஷ்டவசமானது.

"என்ரை மாமா ஆமி சுட்டு செத்துப் போனார். நீ இங்கை கூட்டம் வைச்சுக்கொண்டிருக்கிறாய்"

"நீ யார்?"

"சட்டை இல்லாம ரோட்டில உரிஞ்சு போட்டுத் திரி"

இப்படியாக ஏவிவிடப்பட்ட, வெறி பிடித்த கும்பல் மக்கள் முன் தங்கள் அசிங்கமான கோர முகங்களைக் காட்டிக்கொண்டன.

பின் கூட்டத்திற்கு வந்த பொதுமகன் ஒருவர் "பொலிசுக்கு தகவல் தெரிவியுங்கோ" எனக் கூறியபின்பு அவ்விடம்விட்டு அகன்றது மறவர் கூட்டம்.

"கடந்த பத்தாண்டு காலத்தில், யுத்தச் சூழலின் மத்தியில், ஈழத்தின் அரசியல் விமர்சனச் சூழல் மோசமான கட்டத்தை வந்தடைந்திருக்கிறது. எந்த நிகழ்ச்சிகள் குறித்தும் சொந்தமான ஒரு அபிப்பிராயத்தை உருவாக்கிக் கொள்வ



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

து உயிருக்கு ஆபத்தான விடயமாக மாறியிருக்கிறது" என பேராசிரியர் நித்தியானந்தனும்,

"விடுதலைப் போராட்டம் என்ற பெயரில் சுயாதீனமான சிந்தனையையும், விமர்சனத்தையும் நசுக்கிவரும் சூழலில் இருந்து நாம் விடுபடவேண்டியுள்ளது" எனப் பேராசிரியர் சிவசேகரமும் குறிப்பிடுவது நிலைமைகளை நன்கு வெளிக்கொணர உதவுகிறது.

- சுகன்

---

# தூண்டில் பற்றிய விவாதத் தொடரில்....

தூண்டில் மீது கடந்த காலங்களில் வைக்கப்பட்ட விமர்சனங்களையடுத்து அதற்குப் பதில் கூறுவதாக சக-ஓடிகளாலும், தோழர் சிவசேகரத்தாலும் மற்றும் நண்பர்களாலும் கலம் 34,35இல் வைக்கப்பட்ட கருத்துகளை மிக ஆவலோடு அவதானித்து வந்தேன்.

ஏனெனில் இம்மாதிரியான விமர்சனங்களே வெளிநாடுகளிலிருந்து வெளிவரும் சகல சஞ்சிகைகள்மீதும் வைக்கப்படுகின்றன.

சக-ஓடிகளின் கருத்தும், சிவசேகரத்தின் கருத்தும் கருத்தும்பல சர்ச்சையான விடயங்களைத் தொட்டுள்ளன. குறிப்பாக தோழர் சிவசேகரத்தின் பல உடன்பாடுகள் - காணப்பட்டாலும் சில கருத்துகளே என்னை எழுதத் தூண்டின.

தோழர் சிவசேகரத்தினால் வைக்கப்பட்ட, 'சிங்களப்பேரினவாதிகளிடையே இருந்த/இருக்கிற முரண்பாடுகளை தமிழ், சிங்கள இயக்கங்கள் பாவிக்கத் தவறிவிட்டன' என்ற கருத்து என்னைப் பொறுத்த மட்டில் ஆபத்தானதாகவும், விமர்சனத்திற்கு உள்ளாக்கப்படவேண்டியதாகவும் தெரிகிறது. ஏனெனில் தற்போது பல 'இடதுசாரிகளிடையே' நிலவும் 'புலி இயக்கத்தைத் தமிழ் தேசியத் தலைமையாக அங்கீகரித்தல்' போன்ற கருத்தும், மேற்படி 'முரண்பாடுகளைப் பாவித்தல்' என்ற கோட்பாட்டுக்குள்ளேயே உருவாகின.

இது ஏன் முக்கியமானதெனில் எமது போராட்ட வரலாற்றில் 'எதிரிகளின் முரண்பாட்டைப் பாவித்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தல்' என்ற கொள்கையின்கீழ் பல குரோதங்கள், தோல்விகள் ஏற்பட்டுள்ளன.

குறிப்பாக இலங்கையைப் - பொறுத்தமட்டில் யூ.என்.பு,எஸ்.எல்.எவ்.பி முதலாளித்துவத்திற்கு இடையே காணப்படும் முரண்பாட்-டைப் பாவிப்பதாகக் கூறிக்கொண்ட சி.பி(ரஷ்ய, சீன), எல்.எஸ்.எஸ்.பி. கட்சிகள் பேரினவாதத்திற்குச் சோடை போனமையும் (பண்டாரநாயக்க நல்லவர் என்ற கோஷம்), இந்தியாவிலும் இம் மாதிரியான முரண்பாட்டை பாவிப்பதாகக் கூறிக்கொண்ட சி.பி.ஐ-சி.பி(எம்), சில சி.பி(எம்.எல்) குழுக்களும் சொல்லிக் கொண்டமையையும் கவனத்திற்கு எடுக்கப் படவேண்டும்.

ஏன், இலங்கை, இந்திய அரசுகளிடையே காணப்படும் முரண்பாடு பற்றிப் பேசப்பட்டபோதுதா-னே இலங்கை-இந்திய அரசுகளின் ஒப்பந்தம் ஏற்பட்டு இயக்கங்களை வாயடைத்தமை மற்றும் ஈரானில் ஷாவுக்கு எதிராக கொமெய்னிக்கு இதே கருத்தைக்கொண்டு உதவிய பல புரட்சியாளர்கள் பின் கொமெய்னியின் கொலைவெறிக்குப் பலியானமையும் வரலாறு.

எனவே இங்கே யாரையார் பாவித்தார்கள் என்பதுதான் முக்கியமாகப் பார்க்கவேண்டும். அதிகமாக எல்லா வரலாற்றிலும் நாம் தான்மக்கள்தான் பாவிக்கப்பட் - டோம்.

அது மாத்திரமல்ல, ஆட்சியாளர்களிடையே உள்ள முரண்பாடு நிலையானதல்ல. எப்போதும் எமக்கு எதிராக ஆட்சியாளர்கள் தமது முரண்பாடுகளைவிட்டு இணைந்ததாகதான் சரித்திரம்.

முரண்பாடுகளைப் பாவித்தல் சம்பந்தமாக எமது நாட்டில் முன்பு நடந்த 'கொம்யுனிஸ-ரொட்கிஸ விவாதத்தை' தொடக்குவது அல்லது ஆட்சியாளர்களிடையே-பேரினவாதிகளிடையே முரண்பாடுகளிருக்கின்றன என்பதை நிராகரிப்பது எனது நோக்கமல்ல.

மேற்படி கொள்கை காரணமாக இழைக்கப்பட்ட தவறுகள் இனியும் ஏற்படாமலிருப்பதற்கு நாம் இக்கொள்கை பற்றி ஆழமாக ஆராயவேண்டும்.

மற்றும் புலி இயக்கத்தினருடன் இணைந்து, அவர்களின் முரண்பாட்டை பாவிப்பதாகக் கூறிக்கொண்ட ஈரோஸ் இயக்கத்தின் இன்றைய நிலையையும் நாம் இங்கு நினைவுகூர வேண்டும்.

எனவே தற்போது 'முரண்பாட்டைப் பாவித்தல்' என்ற மேற்படி கொள்கையின் கீழ் ஒரு இயக்கத்தை தமிழீழத் தேசியத்தலைமையாக அங்கீகரிக்கும் தோழர்கள் தமது கொள்கையை இன்னும் ஒரு முறை ஆழ்ந்து சிந்திக்கவேண்டும்.

மேற்படி கொள்கையைத் - தோழர் சிவசேகரமும் கொண்டுள்ளார் என்று நான் கருதவில்லை. முரண்பாடுகளைப் பாவித்தல் என்ற கொள்கை கம்யுனிஸ வரலாற்றில் புதிதானதல்ல.

(தொடர்ச்சி 38 ஆம் பக்கம்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


# விடையில்லாத வினாக்கள்

பின்னேரக் காற்றில் நுரையுடன் சேர்ந்து கரைசேரும் ஆற்றின் அலைகளின் அழகினைப் பார்த்து ரசித்துக் கொண்டிருக்கின்றேன்.

மருமகள் தேவிப்பெட்டை சோற்றுக்கு உலை வைத்துவிட்டு கிணற்றடியில் அரிசி அரிக்கின்றாள் இளகிய அரிசியை அள்ளி வாயில் போட்டுக்கொண்டே அரிசியைக் கழுவுகின்றாள்.

"உலையடியில் அரிசி திண்டாலோ, அம்மியடியில் தேங்காய் திண்டாலோ சாமத்தியப்படும் அண்டைக்கு அடை மழை பெய்யுமாமடி" என்று ஒரு நாள் அம்மா சொன்ன கதையொன்றைச் சொல்லி மருமகளைக் கேலி செய்கிறேன்.

"ஆ . . . பரவாயில்லை" என்று சொல்லிக்கொண்டே வெட்கத்தால் தலைகுனிந்து சிரிக்கிறாள் தேவி.




"அப்பபின்ன ஒரு சுண்டு அரிசி கூடவே எடுத்தனி?" மீண்டும் அவளைக் கிண்டுகிறேன்.

"அம்மா, இஞ்ச பாருங்கோம்மா மாமாவ. பகிடி பண்ணுறார்" தாயைக் கூப்பிடுகிறாள் தேவி.

"உனக்கு அவளோட தனகாம இருக்கேலாதோ. எந்த நேரமும் சின்னப்பிள்ளைகள் மாதிரி கொழுவிக்கொண்டே இருப்பாய்" அக்கா கதைத்துக்கொண்டே தரவை வேலிப் பக்கம் போகின்றா. விறகுச் சுள்ளி பொறுக்க.

வேலியை அடுத்துள்ள தரவையோரத்தால் உள்ள பாதையால் பல சிறுவர்கள் ஓடுகிறார்கள். சாறணை உடுக்காமல் வாயில் கௌவிக்கொண்டும், பின்புறம் கிழிந்த அரைக் காற்சட்டையுடன் சேட் இல்லாமலும், ஒரு சைக்கிளில் நால்வர் இருந்துகொண்டும், நின்றுகொண்டுமாக சிறுவர்கள் ஓடுகிறார்கள்.

"தம்பி பெடியன்கள் ஓடுறாங்கள். என்னெண்டு நீயும் போய்ப் பாரன்" அக்கா சொல்கின்றா.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"சின்னப்பெடியள் விளையாட்டுக்கு ஓடுறுங்கள் எண்டால் நானும் போகவே" அக்காவுக்கு என் பதில் திருப்தியாகவில்லை.

இப்போது அக்கா தரவைவேலிக்கு மேலால் தலையை விட்டு பெடியன்கள் ஓடிய பக்கத்தைப் பார்த்துவிட்டு வருகிறு. முகத்தில் சிறிய மாற்றம்.

"டேய், வட்டிக்கட்டுப்புளியடியில் நிறையச் சனமா இருக்கு. அங்கதான் பெடியன்கள் ஓடுறுங்கள். போய் என்னெண்டுபாத்திட்டுவாவன். அந்திர அவசரத்துக்கு உன்னஉசுப்ப ஏலாது. அடைகட்டை மாதிரி இதுக்குள்ளேயே இருப்பாய். சின்னப்பிள்ளைகளோட தனகிக்கொண்டு"

இனிமேலும் தாமதித்தால் அக்காவின் கதையைத் தாங்க முடியாது. தென்னையில் சரிந்து கிடந்த சைக்கிளை நிமிர்த்தி ஏறிக்கொண்டு தரவைப் பக்கம் போகின்றேன்.

தரவையில் இறங்கும் றேட்டின் முடிவு மேட்டிலிருந்து தூரத்தில் தெரியும் வட்டிக்கட்டுப் புளியடியை நோக்குகின்றேன். உயர்ந்து வளர்ந்த புளிய மரம். அதன் முன்னுல் உள்ள கள்ளிப் பற்றை. புளியமரத்தை வளைத்து நிற்கும் சனக் கூட்டம். ஆண், பெண் என இனம் பிரித்து பார்க்கமுடியாத அளவுக்கு குவியலாக இருண்டு தெரிகிறது.

ஊருக்கும், ஆறுக்கும் இடையில் இருக்கும் தரவை ஓரத்தால் ஊரையடுத்து புளியடியை நோக்கிச் செல்லும் பாதை கிறவலும், களிமண்ணும் சேர்த்துப் போடப்பட்ட பாதை. மாரிகாலத்தில் தரவையில் வெள்ளம் வந்தால் பாதையும் தாண்டு விடும். அப்போது அப்பாதையால் எருமைகளைத் தவிர மனிதர்கள் போகமுடியாது.

வெள்ளம் வற்றி வெயில் எறித்து நிலம் காய்ந்ததால் மாடுகளின் கால் பதிந்த குழிகள் சைக்கிளை ஓடவிடாமல் தடுக்கி, முடக்கி தள்ளாட வைக்கின்றன.

## கமலேஸ்

ஒருவாறுக மிதித்துக்கொண்டு செல்கின்றேன். என் சைக்கிளின் வேகத்திலும்விட வேகமாக ஓடிவரும் சிறு பெடியன்கள் என்னை முந்திக்கொண்டு ஓடுகிறுர்கள். என்னை எதிர்கொண்டும் பெடியன்கள் ஓடிவருகிறுர்கள்.

நடுவழியில் குவித்துக் கிடந்த பச்சைச் சாணியை சர்ர்ர் என்ற சத்தத்துடன் இரண்டாகப் பிரித்துவைத்துவிட்டு செல்கிறது என் சைக்கிள்.

அக்காவின் வீடு தாண்டி அடுத்த றேட்டின் அருகில் உள்ள வம்மி மரத்தடியில் பெண்கள் பலர் கூடி நிற்கிறுர்கள். ஏதோ குசுகுசுக்கிறுர்கள். சிலரின் முகத்தில் கவலை தெரிகிறது.

"நீ எங்கடா போறுய்" பெண்கள் கூட்டத்திலிருந்து ஒரு

www.tamilarangam.net

குரல். திரும்பிப் பார்க்கின்றேன்

சின்னம்மாவின் மகள் மரகதவல்லி அக்கா. நான் பதில் சொல்லவில்லை.

"டேய் அங்க போகாத வீட்ட போ" அக்காவின் குரல் என் பின்னால் காற்றில் மிதந்து வருகிறது.

புளியமரக்கட்டடியில் ஒரு முறிவு. சைக்கிள் ஓட முடியாதளவிற்கு மணல் நிரம்பிய மடு அது நான் இறங்கிச் சைக்கிளைத் தள்ளிக்கொண்டு போகிறேன்.

புளியடியை வந்து சேர்ந்துவிட்டேன். புதினம் பார்த்துவிட்டுத் திரும்பும் சிறு பெடியன்களிடம் கேட்கிறேன். "என்னடா புதுனம்?"

"சி. ஐ. டி. அண்ண" பெடியன்கள் ஓடிவிட்டார்கள்.

நான் கூட்டத்தை நெருங்குகிறேன். நான் சிறுவனாக இருக்கும்போது ஸ்ரேட்டில் ராசப்புக் குறவன் பாம்பாட்டியதைப் பார்க்கவென கூடிய கூட்டத்தின் — ஞாபகம் வந்தது.

சனக்கூட்டத்தின் பின்னால் உள்ள ஒருவனின் இரு தோள்களிலும் கைகளை ஊன்றி உன்னிப் பார்க்க முயற்சித்தேன். எதுவும் தெரியவில்லை.

"ஆ... இங்... இங்" ஒரு பெண்ணின் அழுகைக் குரல் அது. அபயக் குரல். ஈனஸ்வரக் குரல்.

"எவ்வளவு செய்தாலும் ஒண்டும் சொல்லமாட்டாள் என்டுதான் நிக்கிறள். அடியடா அவளை.." கட்டளையொன்று பிறப்பிக்கப்படுகிறது.

அடி விழுந்ததோ, மிதி விழுந்ததோ நான் அறியேன்.

"மகே அம்மே...மகே அம்மே... அம்மே.... " ஓங்கி ஒலித்த குரல் ஒடுங்கி அனுங்குகின்றது.

"ஆ.. ஆ... ஆ..." ஒரு மழலையின் அழுகை. தாயின் அழுகையைக் கண்டு வரிட்டு அழுகின்றது அக் குழந்தை.

ஒரு தாயும், குழந்தையுமா?

என் இதயம் படபடவென்றடிக்கின்றது. கஸ்டப்பட்டு சனத்தின் ஊடே கண்ணைவிட்டுப் பார்க்கின்றேன்.

ஒரு கிழிந்த அழுக்கான துண்டொன்று அவள் பெண்ணுறுப்பை மட்டும் மறைத்துக்கொண்டு இடுப்பில் இருக்கின்றது. அடித்தொடைவரை தெளிவாகத் தெரியும் அவள் கால்களில் புளியம் மிலாறின் அடிகாயங்கள். இரண்டு கைகளும் பின்னால் சேர்த்துக்கட்டப்பட்டிருக்கின்றன.

தூக்கி எறியப்பட்டுக்கலைந்து கிடக்கும் அழுக்குத் துணிக்குள் இரண்டு, மூன்று தகரப்பேணிகள். ஒரு சீலை மாராப்பு.

(தொடர்ச்சி 34 ஆம் பக்கம்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




01.11.90 வீரகேசரி

தென்னிலங்கையில் மீண்டும் தீவிரவாத நடவடிக்கைகள் ஆங்காங்கே தலைதூக்கிவருவதாகச் சந்தேகிக்கும் பொலிசார் திடீர் தேடுதல் நடவடிக்கைகளை மேற் கொள்ளத் தொடங்கியுள்ளனர்.

யாழ் குடாவில் தொடர்ந்து பெய்யும் மழைக்கு மத்தியிலும் பரவலான விமானக் குண்டுவீச்சுத் தாக்குதல்கள், றெக்கட், செல் வீச்சுத் தாக்குதல்கள் இடம்பெற்று வருவதாகவும், இதனால் நாளொன்றுக்குச் சராசரி 10பேர் வரையில் பலியாவதாகவும், வைத்திய வசதிகளின்றி மக்கள் பெரும் அவலத்தை எதிர்நோக்குவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்தியக் கடவுச்சீட்டுப் பெற்றுள்ள மலையக மக்கள் இலங்கையிலேயே பிறந்து, வளர்ந்தவர்களாக இருக்கலாம். ஆனலும் அவர்கள் இந்தியப் பிரசைகளாகக் கணிக்கப்படுவதால் தேசிய அடையாள அட்டை வழங்க முடியாது – ஆட்பதிவுத் திணைக்கள ஆணையாளர்.

02.11.90 வீரகேசரி

சர்வதேச மட்டத்தில் இலங்கைக்கு உலக இஸ்லாமியத் தலைமையின் உதவியும், ஒத்துழைப்பும் தேவைப்படுவதாக லிபிய ஜனதிபதி கடாபியை சந்தித்த இலங்கை முஸ்லீம் சமய, கலாச்சார அமைச்சர் . கூறியுள்ளார்.

கடந்த காலங்களில் அரசியல்வாதிகள் கையாண்ட சந்தர்ப்பவாத அரசியலின் காரணமாகவே இன்று இந்த நாட்டில் பல்வேறு பிரச்சினைகள் தோன்றியுள்ளன. இவ்வாறன பிற்போக்குவாத அரசியல் அணுகுமுறை நிறுத்தப்பட்டாக வேண்டும். இல்லையேல் நாட்டில் சமாதானத்தைக் காணமுடியாது – ல. தோ. தொ. யூனியன்

தலைமன்னர் மேற்குக் கடற் கரையோரத்தில் இழுத்து வைக்கப்பட்டிருந்த சுமார் 50 படகுகள் மீது கடற்படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்து சேதப்படுத்தியுள்ளனர்.

திருச்சியில் உள்ள அகதி முகாமொன்றில் ஈ. பி. ஆர். எல். எவ்– டெலோ இயக்கத்தைச் சேர்ந்தவர்களுக்கிடையில் ஏற்பட்ட மோதலில் டெலோ இயக்கத்வர் ஒருவர் – கொல்லப்பட்டுள்ளார்.

02.11.90 தாயகம்

இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகள் இலங்கை அரசு கேட்ட 879 மில்லியன் டொலர்களுக்குப் பதிலாக 1,000 மில்லியன் டொலர்களை வழங்க முன்வந்துள்ளன.

சத்துருக்கொன்டான் இராணுவ முகாமுக்கு அருகிலுள்ள ஏழை மீனவமக்கள் வாழும் பகுதியைச் சென்றடைந்த முஸ்லீம் ஊர்காவற் படையினர் இராணுவ முகாமை நோக்கி அனைவரையும் அடையாள அட்டையுடன் வருமாறு இராணுவ அதிகாரிகள் அழைப்பதாகக் கூறினர். அப்பாவி மக்கள் தமது அடையாள அட்டைகளுடன் இராணுவ முகாமுக்குச் சென்றபோது, முகாமின் வேறு ஒரு பாதை வழியாகச் செல்லும்படி ஒருவர் பின் ஒருவராக அனுப்பப்பட்டனர். தம்மை அதிகாரிகள் பரிசோதிக்கப் போகிறர்கள் என அம் மக்கள் நம்பினர். ஆனல் பாதைத் திருப்பத்தில் வைத்து ஒவ்வொருவராக நீண்ட வாளினல் கழுத்துச் சீவிக் கொல்லப்பட்டனர் . தலை ஒழுங்காக வெட்டப்படாது துடித்தவர்களை உடனே மீண்டும் வாளால் குத்திக்கொன்றனர். 50 இற்கும் மேற்பட்டவர்கள் இவ்வாறு கொல்லப்பட்டுள்ளனர். டெலோவும் இராணுவமும் இச் சடலங்களை இஅப்புறப்படுத்தின.

03.11.90 வீரகேசரி

இந்தியக் கடவுச்சீட்டுப் பெற்ற 2 தோட்டத் தொழிலாளர்களை விரைவில் நாட்டைவிட்டு வெளியேறும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

படியும், தவறினல் கைது செய்யப்படுவீர்கள் என்றும் எச்சரிக்கை கடிதங்கள் குடிவரவு, குடியகல்வு திணைக்கள ஆணையாளரால் அனுப்பப்பட்டுள்ளன.

வெலி ஓயாவில் கிராமம் ஒன்று புலிகளால் தாக்குதலுக்குள்ளானதில் 16 சிங்கள மக்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

மன்னரில் இருந்து வெளியேற்றப்படும் முஸ்லீம்களின் இடங்களில் அடுத்த சில தினங்களில் ஆயிரக்கணக்கில் இந்தியர்கள் கொண்டுவந்து குவிக்கப்படலாம் —மக்கள் ஐக்கிய முன்னனியின் தலைவர்

கொழும்பு கோமாகமையில் உள்ள தனியார் தொழிற்சாலை ஒன்றில் புளோரின் வாயுக் கசிவு காரணமாக அத் தொழிற்சாலையில் கடமை புரியும் 48 ஊழியர்கள் மயக்க நிலையில் வைத்தியாசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். பாதிக்கப்பட்ட பலர் இளம் பெண்களாவார்

காணமற்போனோரையும், கைது செய்யப்பட்டோரையும் மீட்டுத் தருமாறு கேட்டு பல பெண்கள் திருக்கோவில் படைமுகாம் வாசலில் காத்துக் கிடக்கின்றனர்.

05.11.90 வீரகேசரி

மாத்தளை மாவட்டத்திலும், கண்டி மாவட்டத்திலும் அப்பாவி மலையக தமிழ் இளைஞர்கள் திடீரென எவ்வித காரணமுமின்றி கைது செய்யப்பட்டு வருகின்றனர்.

மனித உரிமைகள் மீதான ஐக்கிய— நாடுகளின் தூதுக்குழு அடுத்த வருடம் பெப்ரவரி மாதம் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளது.

யாழ்ப்பாணத்தில் அத்துமீறல்களும், ஜே.வி.பி. காலத்திலும் அத்துமீறல்களும் இடம்பெற்றதை பாதுகாப்பமைச்சர் இலங்கைக்குச் சென்றுள்ள ஐரோப்பிய பாராளுமன்ற உறுப்பினர் குழுவிடம் ஒப்புக் கொண்டுள்ளார்.

பிரஜாவுரிமைச் சான்றிதழ் இல்லாத காரணத்தினல் கூன்னங்கிரிய அரசதோட்டத் தொழிலாளர்களை — வாக்காளர்களாகப் பதிவு செய்ய கிராமசேவகர் மறுப்புத் தெரிவித்துள்ளார்.

06.11.90 வீரகேசரி

தமிழ் இயக்கங்களில் பல்லாயிரக்கணக்கான படையினர் இருந்தபோதும் வடக்கு, கிழக்கு மக்களின் துயர் துன்பங்களைப் போக்க முடியவில்லை. இயக்கப் பிளவுகளே இதற்கு காரணம் — தொண்டமான்

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த முஸ்லீம்கள் உடைமைகள் யாவற்றையும் இழந்து அகதிகளாகக் கொழும்பு வந்து சேர்ந்துள்ளனர்.

07.11.90 வீரகேசரி

விலைவாசி உயர்வு, மக்கள் மயப்படுத்தல் என்ற போர்வையில் தனியார் உடைமை, ஊழியர்கள் மீதான வரி விதிப்பு ஆகியவற்றைக் கண்டித்து எதிர்க்கட்சிகளின் தொழிற்சங்கக் கூட்டணி தலைநகரில் அரச எதிர்ப்பு ஊர்வலம் நடத்தியது.

பெற்ரோலியப் பொருட்களின் விலைகள், பஸ் கட்டணம் ஆகியன மீண்டும் அதிகரிக்கப்பட்டுள்ளன.

1989 ஜூன் மாதத்திற்குப் பின்னர் வியாங்கொ எல்லல என்ற கிராமத்தில் ஓர் இரவில் பெண்கள் உட்பட 35 நபர்கள் ஒரே இடத்தில் கொல்லப்பட்டிருந்தார்கள் — வாசுதேவ

08.11.90 வீரகேசரி

அரசாங்கம் பயிற்சி வழங்க உடன்பட்டால் ஆயுதம் ஏந்தி முஸ்லீம் பகுதிகளைப் பாதுகாக்க 15 ஆயிரம் முஸ்லீம் வாலிபர்கள் தயாராகவிருப்பதாக பாமிஸ் தலைவர் தெரிவித்துள்ளார்.

வடபகுதியிலிருந்து முஸ்லீம்களை வெளியேற்றியமை புலிகளின் அரசியல் வங்குரோத்து நிலையையே எடுத்துக்காட்டுகிறது. தமிழ் பேசும் மக்களைப் பிரித்து வைக்கும் அரசின் முயற்சிக்கு இது அடுத்ததாகும். புலிகளின் இந்நடவடிக்கையானது வெள்ளித் தாம்பாளத்தை அரசிற்கு பரிசளிப்பது போன்றது —நவசமசமாஜக் கட்சி

09.11.90 தாயகம்

சமீபத்தில் புலிகளால் பலவந்தமாக வெளியேற்றப்பட்டு, மீண்டும் மன்னருக்குத் திரும்பிக்கொண்டிருக்கும் முஸ்லீம்களைத் தடுப்பதற்காக புலிகள் அவர்கள் மீது தாக்குதல்களை மேற்கொண்டு வருகின்றனர்.

மன்னர், தாராபுரம், எருக்கலம்பிட்டியிலிருந்து வெளியேற்றப்பட்ட முஸ்



www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

லீம்கள் மீண்டும் அப் பகுதிகளில் குடியேற்றப்படவுள்ளனர். இராணுவப் பாதுகாப்பு இவர்களுக்கு வழங்கப்படுவதுடன், இப் பகுதிகளில் தெரிவான ஊர்க்காவற்படைகளுக்கு ஆயுதங்கள் வழங்கப்படவுள்ளன.

புலிகளுக்கு எதிரான அரசின் யுத்தத்திற்கு புளொட், ஈ.பி.டி.பி., ஈ.என்.டி.எல்.எவ், டெலோ, ஈ.பி.ஆர்.எல்.எவ் இயக்கங்களும் உதவி வருகின்றன. வவுனியாவில் புளொட் இராணுவத்தினருடன் இணைந்து நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர். கொழும்பில் ஈ.பி.டி.பி. பல தமிழ் வாலிபர்களைக் கைதுசெய்து பொலிசாரிடம் ஒப்படைத்து வருகிறது. அத்துடன் இலங்கை அரசுக்கு உதவுமாறும் ஈ.பி.டி.பி. வெளிநாடுகளைக் கோரியுள்ளது. மண்டைதீவு, ஊர்காவற்துறை, பலாலிப் பகுதிகளில் ஈ.பி.டி.பி. இராணுவத்துடன் இயங்கி வருகிறது. மட்டக்களப்பில் டெலோ அரசபடைகளுடன் சேர்ந்து நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றது.

09.11.90 வீரகேசரி

ரூபவாகினியிலும், வானொலியிலும் கூறப்படுபவையெல்லாம் உண்மையில்லை— சு.க.எம்.பி

முஸ்லீம் மாகாணசபையையோ, அல்லது அம்பாறையைத் தளமாகக் — கொண்ட முஸ்லீம் மாகாண சபையுடன் மன்னாரை இணைப்பது பற்றியோ மன்னார் மக்கள் கனவில் கூட விரும்பவில்லை —முஸ்லீம் இயக்கங்களின் தேசிய சபை.

10.11.90 வீரகேசரி

மீண்டும் இயங்க ஆரம்பிக்கப்பட்டுள்ள யாழ். ஆஸ்பத்திரி மீது இலங்கை விமானப்படை விமானம் குண்டு வீசியதால் கட்டிடங்கள் சேதமடைந்துள்ளதுடன் ஐவர் காயமடைந்துள்ளனர்.

தெற்கிலுள்ள விவசாயிகளை கிழக்கின் எல்லைப்புறத்திலுள்ள மகாவலி சி, பி வலயங்களில் குடியேற்றி அப் பகுதியை அபிவிருத்தி செய்து சமாதானத்தையும் நிலைநாட்டுவோம்— மகாவலி அபிவிருத்தி அமைச்சர்

சிங்கள மக்களில் பெரும்பாலானோர் தமிழர் உரிமைகளை எதிர்ப்பவர்கள் அல்லர். இதனால் சிங்கள இனவாதம் முற்றாக இல்லை என்று கூறவில்லை. சிங்கள மக்கள் முன் சரியான முறையில் இடதுசாரிகள் பிரச்சினைகளை எடுத்துச்செல்லவில்லை —வாசுதேவ

இன்று தொழிலாளர் வர்க்கத்தின்மீதும், அப்பாவி மக்கள் மீதும் தாங்கமுடியாத பொருளாதாரப் பாரத்தை அரசாங்கம் சுமத்தியுள்ளது— எதிரணி தொழிற்சங்கக் கூட்டணி.

6 வாரங்களுக்கு ஒருமுறை பொலிஸ், இராணுவத்தில் 3,500 பேர் சேர்க்கப்பட்டு பயிற்சியளிக்கப்படவிருக்கிறது.

11.11.90 வீரகேசரி

இன்று நாளொன்றுக்கு சராசரி ஐந்நூறு தமிழர்கள் இலங்கையைவிட்டு வெளியேறிக்கொண்டிருக்கின்றனர்

லண்டனில் புலிகளுக்கும், அரசுக்குமிடையில் சமரசப் பேச்சுவார்த்தைகள் மிகவும் சுமுகமான சூழ்நிலையில் இடம்பெற்று வருகின்றன. லண்டனில் இலங்கைத் தூதுவராக இருக்கும் சேபால ஆட்டிகலவுக்கும், கிட்டுவுக்குமிடையில் இந்தப் பேச்சுவார்த்தைகள் நடந்துகொண்டிருக்கின்றன.

தமிழ் மக்களுக்கும், முஸ்லீம்களுக்குமிடையே பிளவை ஏற்படுத்த அரசு முயல்கிறது. அதற்கான பின்னணியைப் புலிகள் ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறார்கள் — வாசுதேவ

முஸ்லீம் மக்களின் தனித்துவத்தை அங்கீகரித்து இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கான உகந்த திட்டம் ஒன்றை புலிகள் தவிர்ந்த ஏனைய தமிழ் குழுக்களும், முஸ்லீம் கட்சிகளும் இணக்கப்பாட்டுடன் முன் வைத்தால் அதை ஏற்றுக்கொள்ள அரசாங்கம் தயாராயிருக்கிறதா? — ஈ.பி.ஆர்.எல்.எவ்

12.11.90 வீரகேசரி

சாவகச்சேரியில் மேற்கொள்ளப்பட்ட விமானத் தாக்குதலால் 4பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

மட்டக்களப்பு அகதி முகாம்களில் தங்கியிருந்த ஏறாவூர் அகதிகள் மீண்டும் தமது சொந்த இடத்துக்கு திரும்பியபோதும் அங்குள்ள ஊர்க்காவற்படையினரால் விரட்டப்பட்டு மீண்டும் அகதி முகாம்களுக்கே திரும்பியுள்ளனர்.

13.11.90 வீரகேசரி

திருகோணமலை தபால் நிலைய உதவி தபால் அதிபர் இனந்தெரியாதோரால் கடத்தப்பட்டுள்ளார்.

www.tamilarangam.net

மட்டக்களப்பு மாவட்டத்திலும் பூரியா விற்பனைக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

14.11.90 வீரகேசரி

திருமலை மாவட்டத்தில் உள்ள அகதி முகாம்களில் வாழ்பவர்கள் பாதுகாப்பற்ற நிலையில் உள்ளார்கள் இம் முகாம்களுக்குள் படையினர் திடீரெனப் பிரவேசித்து ஆண்களைக் கைது செய்து செல்கின்றனர். அவ்விதம் அழைத்துச் செல்லப்படுவோர் தொடர்பாக எவ்விதமான தகவலும் இல்லை. சில நாட்களுக்குமுன் கிளப்பன் முகாமில் இருந்த 40தமிழ் முகதிகள் கைதாகியுள்ளனர்.

அம்பாறை மாவட்டத்தில் கடமை-யாற்றும் மட்டக்களப்பைச் சேர்ந்த பல தமிழ் அரச ஊழியர்களுக்கு சம்பளம் இடை நிறுத்தப்பட்டுள்ளது. கடந்த ஜுன் மாதத்திலிருந்து வேலைக்குச் சமூகமளிக்காததே இதற்குக் காரணம். பாதுகாப்பின்மை போக்குவரத்தின்மை, தமிழ்-முஸ்லீம் கலவரம் போன்ற காரணங்களால் இவர்கள் வேலைக்குப் போகவில்லை.

வடக்கு, கிழக்குக்கு அதிகாரப் பரவலாக்கலை ஏதோ ஒரு வழியில் செய்து பயங்கரவாதத்தை முடிவுக்கு கொண்டுவரவேண்டும் என்பதிலும், வடக்கும், கிழக்கும் தனித் தனியாகவே இருக்கவேண்டும் என்பதிலும் சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும், ஐ.தே.க.வுக்கும் இடையே ஒத்த கருத்தே நிலவுகிறது —சு.க எம்.பி.

15.11.90 வீரகேசரி

வவுனியா நகரில் உடல்வலியை முறிக்கும் மருந்துவகைகள், கிரேப்வகை சப்பாத்துகள், வாகனங்களுக்குப் பயன்படுத்தப்படும் கிளச் பிளேட்டுகள் என்பவற்றை விற்பனை செய்வதற்கு தடைவிதிக்கப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாணத்தில் தமிழ், முஸ்லீம் மக்களின் பாரம்பரிய பிரதேசங்கள் திட்டமிட்ட குடியேற்றங்களால் பாதிக்கப்படுவதற்கு எதிராகக் குரல் கொடுக்க தமிழ், முஸ்லீம் அரசியற் கட்சிகளின் மத்தியில் உடன்பாடு ஏற்பட்டுள்ளது.

சாவகச்சேரிச் சந்தையில் மேற்கொள்ளப்பட்ட செலி தாக்குதலில் 15பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

புத்தளத்திலிருந்து மன்னருக்குத் திரும்பிச்சென்ற முஸ்லீம்கள் மீது புலிகள் தாக்குதல் நடத்தியதில் ஒருவர் கொல்லப்பட்டார். 6 பேர் காயமடைந்தனர்.

தமிழர் போராட்டமும், வளைகுடா நெருக்கடியும் சேர்ந்து இலங்கையின் 1991அன் வரவுசெலவுத் திட்டப் பற்றுக்குறை மதிப்பீட்டை 6,700 கோடி ரூபாவாக உயர்த்தியுள்ளன

உதவி வழங்கும் நாடுகள் கேட்டுக்கொண்டதன் பேரில் அரசு உணவு மானியங்களை நிறுத்திக் கொண்டதுடன் அரச கட்டுப்பாட்டில் உள்ள பல வர்த்தகங்களை விற்கவும் தயாராகிறது.

மலையகத்தில் அமைதியும், சமாதானமும் நிலவுவது சில பத்திரிகைகளுக்கும், பொலிசாருக்கும் பிடிக்கவில்லை. சிறு சிறு சம்பவங்களையும் பெரிதுபடுத்தி மலையகத்தில் குழப்பமும், குளறுபடியும் நிலவுவதாகப் பிரச்சாரம் செய்வதில் அவர்களுக்கொரு சந்தோசம் — தொண்டமான்

16.11.90 வீரகேசரி

புலிகளை முஸ்லீம் ஊர்க்காவற்படையினரைக்கொண்டு இனம்காண நாம் விரும்பவில்லை. எனவே டெலோ, புளொட், ஈ.பி.டி.பி. ஆகிய புலிகளுக்கு எதிரான குழுக்கள் மூலம் இனம்காண முற்பட்டுள்ளோம். திருக்கோயில், வீரமுனைப் பகுதியில் இராணுவத்தின் உதவியுடன் டெலோ செயற்படுகிறது —பாதுகாப்பமைச்சர்

பாம்புகள் தீண்டியதனல் வைத்திய வசதிகள் எதுவுமின்றி காடுகளில் தஞ்சமடைந்திருக்கும் அகதிகளில் 10 பேர் ஒரேநாளில் உயிரிழந்துள்ளனர். பிரசவ வேதனையாலும் 2 கர்ப்பிணிப் பெண்கள் உயிரிழந்துள்ளனர் இப் படுவான்கரைக் காட்டுக்குள் 60,000க்கும் மேற்பட்ட அகதிகள் எதுவித நிவாரணங்களும், வசதிகளுமன்றி வாழ்ந்து வருகின்றனர். பருவ மழையின் காரணமாக இப் பிரதேசத்தில் பாம்புகளின் நடமாட்டம் அதிகரித்துள்ளது.

அண்மைக்காலமாக பாராளுமன்றத்திலும், வெளியிலும் ஐ.தே.க. வைச் சேர்ந்த சிலர் வடக்கும், கிழக்கும் பிரியவேண்டும் என்ற கோசத்தைப் பிரபல்யப்படுத்தி வருகின்றனர். வடக்கிலிருந்து கிழக்கைப் பிரிப்பதற்-கான அரசியல் தந்திரங்களையும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

கட்டவிழ்த்துவிட்டுள்ளனர்.

அதிகாரத்தைப் பரவலாக்குவதன் மூலமே பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியும். ஆனால் வடக்கு, கிழக்கு மாகாணத்தில் வாழும் மக்களின் அபிலாசைகளை பூர்த்தி செய்யாது, வெறுமனே அதிகாரத்தைப் பரவலாக்குவதன் மூலம் தேசியப் பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியாது — மு.கா.தலைவர்

17.11.90 இந்து

தென்னிலங்கையில் 1987 இலிருந்து 60,000க்கும் மேற்பட்டோர் காணமற் போயுள்ளனர். அரச தகவலின்படி கடந்த வருடம் வடக்கு, கிழக்குக்கு வெளியே 15,000பேர்வரையில் கொல்லப்பட்டுள்ளார்கள். ஒரு மாதத்தில் மட்டும் 1000 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

மட்டக்களப்பில் 30 தமிழர்க்ள் இலங்கை இராணுவத்தினும், முஸ்லீம் ஊர்க்காவற் படையினும் உயிரோடு எரிக்கப்பட்டுள்ளனர்.

திருகோணமலையில் கிளப்பன் பேக் முகாமிலிருந்த 23 தமிழர்கள் வெட்டிக் கொல்லப்பட்டுள்ளனர்.

3 மீனவர்களும், 1 குழந்தையும் கடலில் வைத்து இலங்கைக் கடற் படையினரால் கொல்லப்பட்டுள்ளனர்

17.11.90 வீ

தெற்கில் தோன்றிய பயங்கரவாதம், வடக்கு, கிழக்கில் நிலவும் தீவிரவாதம், மத்திய கிழக்குப் பிரச்சினை ஆகியவற்றால் நாட்டுக்குச் — சோதனைகள் ஏற்பட்டன — பிரேமதாச

சீனன்குடாவில் கிளப்போர்க் அகதி முகாமிலிருந்து 18 தமிழ் அகதிகள் பொலிசாரால் கைது செய்யப்பட்டுத் தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

புலிகளும், அரசும் சண்டையை நிறுத்திவிட்டு சுயநிர்ணய உரிமையுடன்கூடிய வடக்கு-கிழக்கு இணைந்த பிரதேச சுயாட்சி ஒன்றுக்கான பேச்சுவார்த்தையை நடத்த வேண்டும். தமிழினம் மிகவும் நெருக்கடியான சூழ்நிலையை எதிர்நோக்கும் இன்றையவேளையில் புலிகள் தவிர்ந்த ஏனைய தமிழ்க் கட்சிகள் பொறுப்புடன் பணியாற்றவேண்டியது அவசியமாகும். சிலர் அரசுடன் ஒத்துழைப்பது துரதிஷ்டமானது — சண்முகதாசன்

19.11.90 வீரகேசரி

மட்டக்களப்பில் சந்திரசேகரப்பிள்ளை என்பவர் புலிகள் எனச் சந்தேகிக்கப்படுபவர்களால் கொல்லப்பட்டுள்ளார்.

19.11.90 தாயகம்

புலிகளுக்கு எதிரான அரசின் யுத்தத்திற்கு மற்ற இயக்கங்களும் உதவிசெய்துவருகின்றன. வவுனியாவில் இராணுவத்தினரின் ரோந்து நடவடிக்கைகளிலும், தடை முகாம்களிலும் புளொட் உறுப்பினர்கள் இராணுவத்தினருடன் இணைந்து நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர். கொழும்பில் ஈ.பி.டி.பி. பலரைக் கைது-செய்து பொலிசிடம் ஒப்படைத்துவருகிறது. ஊர்காவற்துறை, மண்டைதீவு பலாலி பகுதிகளில் ஈ.பி.டி.பி. இராணுவத்தினருடன் சேர்ந்து நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளது. மட்டக்களப்பில் டெலோ அரச படைகளுடன் சேர்ந்து நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றது. இந்த இயக்கங்களுக்கு அரசு ஆயுதங்களும், வெடி மருந்துக்களும் கொடுத்து வருகிறது. அத்துடன் காயமடைந்தவர்கள் இரா-ணுவத்தினருடன் சேர்ந்து சிகிச்சை பெறுகின்றனர்.

20.11.90 வீரகேசரி

வெளிநாட்டு நிபுணர்களின் ஆலோசனையின்படி ஆட்சியைக்கொண்டு செல்வதினால் நாடு படுபாதாளத்தை நோக்கிப் போய்க்கொண்டிருக்கிறது. இதனால் ஏழை மக்களே கடும் பாதிப்புக்குள்ளாகி வருகின்றனர். உலகவங்கியின் ஆலோசனையின்படி — நாட்டை வழிநடத்தும் இன்றைய அரசாங்கம் 13 வருடங்கள் நாட்டின் மேன்மைக்கு நல்ல காரியங்கள் எதுவும் செய்யவில்லை. இந்த அரசுக்கு உருப்படியான பொருளாதாரத் திட்டமோ, வழிமுறையோ கிடையாது. எதையெதையோ பறைசாற்றும் இவர்கள் வெளிநாட்டுக்-கோடீஸ்வரர்களுக்கு முக்கிய தொழில் நிறுவனங்களைக் கொடுத்துவிட்டனர். அம்பேவல பால்மா தொழிற்சாலை, பெல்வத்த சீனித் தொழிற்சாலை ஆகியவற்றை உதாரணமாகச் சொல்லலாம். வெளிநாட்டவர்களுக்கு இந்நாட்டைச் சுரண்டிக் கொடுக்க வாய்ப்புகளை ஏற்படுத்தியிருக்கும் இந்த அரசு, இந்நாடு ஐ.தே.க.வுக்கு மட்டுமே சொந்



www.tamilarangam.net

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தமானது என்ற நிலையில் செயற்படுகிறது - ம.ஐ.மு. எம்.பி.

கல்முனையில் உள்ள 3 அகதி முகாம்களில் முடங்கிக் கிடக்கும் 1315 அகதித் தமிழ்க் குடும்பங்கள் சமைத்துண்ணப் பாத்திரங்களின்றியும், மாற்ற உடைகளின்றியும், குழந்தைகளுக்குரிய பால்மாவின்றியும் பெரிதும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கின்றனர்

21.11.90 வீரகேசரி

புதிய வரவு-செலவுத்திட்டம் இல்லாதோரை இக்கட்டிலும், உள்ளவரைக் களிப்பிலும் ஆழ்த்துகிறது - சு.க.எம்.பி.

மன்னாரில் முஸ்லீம் மக்கள் பெரும்பான்மையாக வாழும் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள் உட்பட வடக்கு, கிழக்கின் முஸ்லீம்கள் பெரும்பான்மையாகக்கொண்ட உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளை உள்ளடக்கித் தனியான பிரதேச அமைப்பை உருவாக்கவும், வடக்கு, கிழக்கு இணைந்த மாகாண அமைப்பை ஏற்படுத்தவும் தமிழ்-முஸ்லீம் கட்சிகள் தீர்மானித்துள்ளன.

தேசிய பாதுகாப்புநிதி 19 கோடியே 90 இலட்சம் ரூபாவைத்தாண்டியிருப்பதாகப் பாதுகாப்பமைச்சு அறிவித்துள்ளது.

22.11.90 வீரகேசரி

காரைதீவு உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட 15 வயது தொடக்கம் 35வயது வரையிலான சகல ஆண்களும் தம்மால் வழங்கப்படும் விசேட அடையாள அட்டையை அவசியம் பெற்றுக்கொள்ள வேண்டுமென்றும், இந்த அட்டை இல்லாதோர் கைது செய்யப்பட்டுப் பூஸாவுக்கு அனுப்பி வைக்கப்படுவர் என்றும் விசேட அதிரடிப்படையினர் அறிவித்துள்ளனர்.

1977ஆம் ஆண்டு தொடக்கம் எத்தனையோ வரவு-செலவுத் திட்டங்கள் வந்துவிட்டன. ஆனால் தோட்டத் தொழிலாளர்களுக்கு சம்பள உயர்வோ, வாழ்க்கைச் செலவுக்கேற்ற உதவி நிதியோ வழங்கப்படவில்லை -ல.தோ.தொ.யூ.

23.11.90 தாயகம்

அவுஸ்திரேலியா, நோர்வீஜிய அரசு சார்பான நிறுவனங்களுட்பட 130 சமாதானம் விரும்பும் உலக அமைப்புகள் லண்டனில் உள்ள புலிகளின் அலுவலகத்தினூடாக அனுப்பிய சமாதானக் கோரிக்கையை இப்போது தருணம் சரியில்லை என்று பிரபாகரன் மறுத்துள்ளதாக கிட்டு அறிவித்துள்ளார்.

நல்லூருக்குத் திலீபன் நகர் என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. நல்லூர் என்றுவரும் கடிதங்களை இனி விநியோகிக்கவேண்டாம் என்று தபால் அலுவலகங்களுக்குக் கட்டளையிடப்பட்டுள்ளது. வட பகுதியில் பல கிராமங்களுக்கும், தெருக்களுக்கும் அந்த இடத்தில் கொல்லப்பட்ட மாவீரர்களின் பெயர்கள் சூட்டப்படவுள்ளது.

பேச்சுவார்த்தையைத் தொடங்க ஒரு குறியீடாக 3 நாள் ஒருதலைபட்ச யுத்தநிறுத்தத்தை அரசு மேற்கொள்ளவேண்டும் எனவும், அவ்வாறு நிறுத்தம் ஏற்படும் பட்சத்தில் புலிகள் பேச்சுவார்த்தைக்குத் தயார் என்றும் செய்திகள் கிடைத்துள்ளன.

23.11.90 தாயகம்

வடக்கில் முழுநேர ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இலங்கைக்கு கிடைக்கும் வெளிநாட்டு உதவிகளில் கணிசமானவை கடன்களே. இன்றைக்கில்லாவிடினும் என்றைக்காவது எதிர்காலச் சந்ததியினர் இக் கடன்களையெல்லாம் கட்டவேண்டும்.

28.11.90 வீரகேசரி

எந்தவித நோக்கங்களுமின்றி வடக்கிலிருந்து கிழக்கைப் பிரிக்க வேண்டுமென்று கோசம் எழுப்பும் விசமிகளால்தான் இன்று தமிழ்ச் சமூகம் முஸ்லீம்களைச் சந்தேகக் கண்கொண்டு பார்க்கிறது. சிங்களவாக்குகளால் தெரிவாகி அவர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் இத்தகைய முஸ்லீம் அரசியல்வாதிகள் வடக்கு-கிழக்கிலுள்ள முஸ்லீம்களின் நலன்களைக் கருத்திற்கொள்ளாது சிங்களப் பேரினவாதத்தின் குரலாக ஒலிப்பதன் விளைவே வடக்கும், கிழக்கும் இணையக்கூடாது என்ற கோசமாகும். இதற்கு வடக்கு, கிழக்கு முஸ்லீம்கள் அடிமையாகக்கூடாது - இஸ்லாமிய ஜனரஞ்சக மாணவர் அமைப்பு.

மேற்கத்தைய நாடுகளில் உள்ள 'கோல் கேள்' விபச்சார முறையை இலங்கையில் அறிமுகப் படுத்த முயற்சிகள் நடக்கின்றன.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

( 27 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அவள் தலைமாட்டில் அழுதுகொண்டிருக்கும் அழுக்கான அழகிய குழந்தை. கழுத்தில் கறுப்பு நாடா. கிழிந்த சட்டை. வளைத்து நின்ற ஒவ்வொருவருடைய முகத்தினையும் மீண்டும்மீண்டும் பார்க்கிறது அக் குழந்தை. மூக்கால் சளி வழிய, வாயால் நீர் ஒழுக தாயைப் பார்த்து தேமித்தேமி அழுகிறது அக் குழந்தை.

"வத்துறு.. வத்துறு.."

குப்புறக் கிடக்கும் தாயின் வாயிலிருந்து வெளிவருகின்றது இந்த வார்த்தை. பசி எடுத்ததோ என்னவோ தாயின் தலைமயிரைப் பிய்த்து இழுக்கின்றது குழந்தை.

என்ன கொடுமை.

தண்ணீர்க் கரையோரத்தில் கிடந்துகொண்டு தாகத்தால் தவிக்கிறாள் அந்தத்தாய். அருகில் தாயிருந்தும் பசியால் துடிக்கின்றது அக் குழந்தை.

இந்தக் கொடியவர்கள் அவளை இவ்வளவு சித்திரவதை செய்கிறார்களே, அவள் செய்த தவறுதான் என்ன? என்ன தவறு செய்திருந்தாலும் ஒரு பெண்ணுக்கு இப்படியா தண்டனை கொடுப்பது? இவர்கள் என்ன அரக்கர்களா? அசுரர்களா? இவர்களெல்லாம் தாய், தங்கை தமக்கைகளோடு பிறக்கவில்லையா?

என் மனம் துடித்தது. தவித்தது. அவளுக்காக, அந்தக் குழந்தைக்காக அவர்கள் காலைப் பிடித்து கெஞ்சி மன்றாட வேண்டும் போல் என் மனம் சொன்னது. ஆனால் அழ முடியாது என்பது எனக்குத் தெரியும்.

இந்தக் காடையர்களிடம் கருணையை எதிர்பார்ப்பதா? அதைவிட காட்டு மிருகங்களின் காலைப் பிடிக்கலாம்.

"இவள் பயங்கர சி.ஐ.டி. தான்டா. இவ்வளவு செய்தும் ஒரு உண்மையும் சொல்லமாட்டாள் என்கிறாளே. பொல்லாத ஆள்தான்டா"

பக்கத்தில் நிற்கும் இரு பெடியன்கள் கதைப்பது என் காதில் கேட்கிறது.

புளியம் மிலாறால் அடித்த இடங்களில் ரத்தம் கசிந்துகொண்டிருக்கிறது. நான் ஏன் இவைகளைப் பார்த்துக்கொண்டு நிற்கிறேன்? இருந்தும் அவ்விடத்தைவிட்டு நகரமுடியாமலிருக்கின்றது.

மாமா என்னை உன்னோடு கூட்டிப் போகமுடியாதா என அக் குழந்தை என்னைப் பார்த்து கெஞ்சுவதுபோல் இருக்கிறது. அழுது களைத்த குழந்தை தன் அழுக்குப் பெருவிரலை சூப்பிக்கொண்டிருக்கிறது. என்னை அறியாமலே என் கண்கள் கலங்குகின்றன.

"அவளை நிமிர்த்திப்போடுங்கடா"



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தென்னம் குற்றியொன்று காலால் உருட்டப்படுவதுபோல் அவள் காலால் உதைக்கப்பட்டுப் புரட்டப்படுகின்ருள்.

இப்போது அவள் முகத்தை என்னுல் நன்கு அடையாளம் காணமுடிகின்றது.

கலேந்த தலேமுடி. கண்க



ளுக்குக் கீழ் இரண்டு கன்னங்களும் வீங்கிக் கழுத்துப் போயிருக்கின்றன. உதடுகளும் வீங்கி வெடித்து... மூக்குத் துவாரங்களிலிருந்து ரத்தம் வடிந்து கொண்டிருக்கின்றது.

இந்த நிலேயிலும் அவளை என்னுல் அடையாளம் காண முடிகின்றது. இவள்.. இவள் ...

பத்து வருடத்துக்கு முன்பு அப்பா வருத்தமாக மட்டக்களப்பு ஆஸ்பத்திரியில் இருந்தபோது, அப்பாவைப் பார்க்க ஒவ்வொருநாளும் மட்டக்களப்புக்கு போய்வருவேன். அப்போது இவள் பைத்தியக்காரி கோலத்தில் நின்றுகொண்டு சிரித்து, ஆடிப் பாடிப் பிச்சை கேட்பாள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அதன் பின்பு ஐந்து வருடத்திற்கு முன்பும் அதே கோலத்தில் அவளை நான் கண்டேன் .

ஐந்து மாதத்தின் முன்பு கையில் ஒரு குழந்தையுடன் கல்முனைச் சந்தியில் நின்று அழுகிய வாழைப்பழங்களைத் தானும் தின்று, தன் பிள்ளைக்கும் கொடுத்துக்கொண்டிருந்ததைக் கண்டேன்.

இவள்.. இவள்...பைத்தியக்காரி. இன்று நேற்றல்ல . நான் அறிந்தவரையில் பத்துவருடத்தின் முன்பே இவள் பைத்தியகாரி. இதை நான் மட்டுமல்ல இந்தப் பகுதி மக்கள் எல்லோருமே அறிந்திருப்பார்கள்.

வீடு வாசலற்ற, சாதி, சனமற்ற இந்தப் பைத்தியக்காரியா சி.ஐ.டி? இவளா? அட பாவிகளே, ஏனடா இந்தப் பாவத்தைச் செய்கின்றீர்கள்? உங்களைத் தட்டிக்கேட்க ஆளே இல்லையா? உங்கள் பயிற்சியையும், வீரப் பிரதாபத்தையும் பரீட்சிக்க இந்தப் பைத்தியக்காரியைத்தானு பலியாக்கவேண்டும்?

சிறுவயதில் பக்கத்து வீட்டுப் பெடியன்கள் எல்லோரும் சேர்ந்து சுருக்கு வைத்து ஓணான் ஒன்றைப் பிடித்து அதற்குப் புகையிலையைக் கொடுத்து ஆடவைத்து வேடிக்கை பார்ப்பார்கள்.

சாரைப் பாம்பைப் பிடித்து மண்ணெண்ணை ஊற்றி ஓடவிட்டு வேடிக்கை பார்ப்பார்-கள்.

அதையெல்லாம் பார்க்க பிடிக்காமல் அழுதுகொண்டு அம்மா பின்னுல் ஒழிந்துகொள்வேன் அப்படிப்பட்ட நான் அதேபோன்ற ஒரு ஈனச்செயலை ஏன் பார்த்துக்கொண்டிருக்கிறேன். என்னை நானே கேட்கிறேன்.

"எடுங்கடா அந்தக் குச்சிகளை" ஒருவனின் கட்டளைஇது

சிறு சிறு காய்ந்த புளியங்குச்சிகள். அவளின் கைவிரல் இடுக்குகளில் அடுக்கப்படுகின்றன குச்சிகள் பொருத்தப்பட்ட அவள் கை ஒருவனுல் நிலத்தில் கிடையாக வைத்துப் பிடிக்கப்படுகின்றன. ஓங்கிய பொல்லொன்று அவள் கைப் பெருவிரலில் விழுகின்றது.

"மகே அம்மே..அம்மே அம்...ம்".

அவளின் உடல் சுருண்டு எழும்பிக் குதித்து நிலத்தில் விழுகின்றது.

வீல்.. என்று அழுகின்றது குழந்தை.

அவளுக்குக் கொடுக்கும் தண்டனையை எனக்குக் கொடுங்கடா பாவிகளே... என் மனம் அழுகின்றது.

"சொல்லடி உண்மையை சொல்லடி. அவள் இதுக்கெல்லாம் சொல்லமாட்டாள். கொண்டு வாங்கடா மிளகாய்பொடிய "

( மிகுதி அடுத்த கலத்தில்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தேர்தல் !

கிழக்கும், மேற்கும் இணைந்த முழு ஜேர்மெனியின் முதலாவது பாராளுமன்றத் தேர்தல் இம் மாதம் 2ஆம் திகதி இங்கு வாழும் சுமார் 45 இலட்சம் வெளிநாட்டவர்களின் பங்களிப்பின்றி வழக்கம்போல் நடந்து முடிந்துள்ளது.

பெரும்பாலான வெளிநாட்டவர்கள் 30 வருடங்களுக்கு அதிகமாக இங்கு வாழ்ந்துகொண்டிருந்தாலும் இன்றுவரை அவர்களுக்கு வாக்குரிமை வழங்கப்படவில்லை. கூலியுழைப்புத் தொழிலாளர்களாக வாழ்ந்து, தமது வாரிசுகளையும் கூலியுழைப்புத் தொழிலாளர்களாகவே 'ஒப்புக்கொடுக்க' வேண்டிய நிர்ப்பந்தத்திலுள்ள, சுரண்டப்படும் இவ் வெளிநாட்டவர்களை 'துரத்தும்' கொள்கைகள், கோஷங்கள் இந்தத் தேர்தலிலும் தவறவிடப்படவில்லை.

ஜனநாயக முறை என்று வர்ணிக்கப்படும் தேர்தலில் இம்முறை 77.8 வீதமான ஜேர்மென் மக்களே வாக்களித்துள்ளனர். மேற்கு–கிழக்கு இணைவு, மதில் உடைப்பு, ஐரோப்பா கூட்டு அரசியல்... போன்ற 'உன்னதங்கள்' ஆளும் வர்க்கத்தாலும், வலதுசாரி, பழமைவாதிகளாலும் முன்வைக்கப்பட்டாலும், இந்த 'உன்னதங்கள்' அனைவரையும் கவர்ந்துவிடவில்லை என்பதை வாக்களிப்பில் கலந்துகொள்ளாதோர் தொகை காட்டுகிறது.

ஜனநாயகம் வேண்டும், ஒரு கட்சி ஆட்சிமுறை வேண்டாம் என்று கோரிக்கைகள் வைத்த முன்னாள் கிழக்கு ஜேர்மெனி மக்களில் 3/4 பங்கினர் மட்டுமே வாக்களித்துள்ளமையும், ஏனையோர் பகிஷ்கரித்துள்ளமையும், இணைவின் பின்பும் அவர்கள் பெரிய அரசியல் வேறுபாடுகளைக் காணவில்லை என்பதைக் காட்டுவதாகவே கொள்ளமுடியும்.

பலராலும் எதிர்பார்க்கப்பட்டபடியே வலதுசாரிப்பழமைவாதிகளின் கூட்டு (கிறிஸ்தவ ஜனநாயகக்கட்சி C.D.U, கிறிஸ்தவ சோசலிஸக் கட்சி C.S.U, சுதந்திர ஜனநாயகக் கட்சி F.D.F) 55வீத வாக்குகளைப் பெற்றுத் தனது ஆட்சிக் காலத்தை நீடித்துக்கொண்டுள்ள அதேநேரம், இடதுசார்புப் பசுமைக் கட்சி(Grunen) பாரிய தோல்வியைத் தழுவிக் கொண்டமை அவதானத்திற்குரியதாகும். அத்துடன் 'இடம்–வலம்' ஆடிக்கொண்டிருந்த சமூக ஜனநாயகக் கட்சியின் (S.P.D) தோல்வியும் குறிப்பிடத்தக்கதாகும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பசுமைக்கட்சிக்குள் நடைபெற்றுவரும் இடதுசாரிப் போக்கிற்கும், சமரசப் போக்கிற்கும் இடையிலான தொடர்ச்சியான உட்கட்சிப் போராட்டங்களும், புத்திஜீவிதப் போராட்டங்களுமே இக் கட்சி மீதான அதிருப்தியை வளர்த்து, கட்சி பற்றிய குழப்பத்தையும் தோற்றுவித்துள்ளது.

அரசியல் சாசனத்தைக் காரணமாகக் காட்டி மேற்கொள்ளப்பட்ட திடீர் சோதனைகள், மறைமுக ஆக்கிரமிப்புகள், பணமோசடி போன்ற குற்றச்சாட்டுகள், முன்னுள் கிழக்கு ஜேர்மெனியின் 'சர்வ அதிகாரக்' கட்சியான சோசலிஸ ஐக்கியக் கட்சியின் வாரிசாகவே காட்டப்பட்டு சேறடிப்பு... என்று ஆளும் கட்சிகளின் பல பிரயத்தனங்களின் பின்பும், கிழக்கு ஜேர்மெனியில் புதிதாகத் தோன்றிய சோசலிஸ ஜனநாயகக் கட்சி(PDS) ஆச்சரியப்படக்கூடிய விதத்தில் 11.6வீத வாக்குகளைப் பெற்று 17 அங்கத்தவர்களைப் பாராளுமன்றத்திற்குத் தெரிவாக்கியுள்ளது. இவ்வெற்றியானது எதிர்காலத்தில் இக் கட்சியை நேரடியாகவே தடைசெய்ய வலதுசாரிக் கட்சிகளைத் தூண்டினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

மொத்தத்தில் இந்தத் தேர்தலில் இடதுசாரிகள், சமூக ஜனநாயகவாதிகள் ஆகியோரின் முறிவு, தெறிப்பு, உடைவு என்பன வலதுசாரர் பழமைவாதிகளை அவர்களின் கூட்டுகளைப் பலப்படுத்தியிருப்பதுடன், புதிய நாஸிகளுக்கான வாக்குகளும் இக்கூட்டுகளுக்கே பங்கிடப்பட்டிருப்பதானது புதிய நாஸிகளின் 'கொள்கை'களையே இவ்வலதுசாரர் பழமைவாதிகளின் கூட்டும் கொண்டிருப்பதைக் காட்டுகிறது.

இத் தேர்தலை ஒரு அபாயக்குறியாக எடுத்து, இடதுசார்புக் கட்சிகள் தங்களை விமர்சனத்திற்குட்படுத்தி, இதுவரை கடைப்பிடித்த அரசியல் கொள்கைகள், வழிமுறைகளை மீள் பரிசீலனை செய்து, தங்களைப் பலப்படுத்திக் கொள்ளாவிடின் தேசியவாதம், இனவாதம், நிறவாதம், புதிய ஐரோப்பிய வாதம் என்பவற்றின் வேகமான வளர்ச்சியை முறியடிக்க முடியாமல் போய்விடும்.

தேர்தல் முடிவுகளும், கதிரைகளும்!

| கட்சிகள் | % | கதிரை |
|---|---|---|
| CDU/CSU | 43,8 | 319 |
| SPD | 33,5 | 239 |
| FDP | 11,0 | 79 |
| Grüne (W) | 3,9 | – |
| Grüne (O) | 1,2 | 8 |
| PDS | 1,9 | 17 |

( 24 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இக் கொள்கைதான் ஒரு சில தோழர்களின் மேற்குறிப்பிட்ட தவறான நிலைப்பாட்டிற்குக் காரணமானது எனச் சுட்டிக் காட்டுவதுதான் எனது நோக்கம்.

—என்.பி.நாதன்

(தொடர்ச்சி 41 ஆம் பக்கம்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# துப்பாக்கிக் கலாசாரத்திலிருந்து மீள்வதெப்போது?

(கலம் 55 இன் தொடர்ச்சி)

## கிளர்ச்சியும் வன்முறையும்

ஆயிரத்தித் தொள்ளாயிரத்து எண்பத்தேழிலிருந்து ஜே.வி.பி/டி.ஜே.வி ஈவிரக்கமில்லாத ஆயுத நடவடிக்கைகளில் இறங்க ஆரம்பித்து விட்டது. இவர்களின் இலக்கு ஆட்சியிலிருந்த 'பொம்மை அரசை' மட்டுமே குறித்து அமையவில்லை.

பெரும்பான்மை சிங்கள மக்கள் மத்தியிலிருந்து தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை ஆதரித்து நின்றவர்களையும், இனப்பிரச்சனைக்கு அரசியல் தீர்வாக தமிழர்களுக்கு அதிகாரப் பரவலாக்கத்தை வழங்க வேண்டும் என்று வந்தவர்களையும் இவர்கள் கொடூரமாகக் கொலை செய்தனர். பாரம்பரிய இடதுசாரிக் கட்சிகளில் தீவிரமாக இயங்கியவர்களையும் புதிய இடதுசாரிகள் குழுவினரையும் ஜே.வி.பி யினர் இவ்வாறு கொன்று தீர்த்தனர். ஜே.வி.பி தனது ஆயுத நடவடிக்கையின் ஆரம்ப கட்டத்தில் அரசின் பாதுகாப்புப் படையின் கீழ்மட்டத்தைச் சேர்ந்த இராணுவ வீரர்களின் அநுதாபத்தைத் தம்பக்கம் ஈர்த்துக் கொள்ளக் கூடியதாக இருந்தது.ஜே.வி.பி தோற்றம் பெற்ற அதே சமுகத்தளத்தைச் சேர்ந்தவர்களாக இவர்களும் இருந்ததால் இது லேசானதாக இருந்தது. அத்துடன் ஜே.வி.பி யின் தீவிரவாதத்தை நெறிப்படுத்திய சிங்கள பௌத்த தத்துவார்த்த சிந்தனைக்கு இவர்கள் எளிதில் வசமாகினர்.

www.tamilarangam.net

சிங்கள தேசியவாதத்தை ஒரு அரசியல் ஆயுதமாகப் பாவித்து இந்த பூர்சுவா அரசைத் தூக்கி எறியத்தக்க தெட்டத் தெளிவான- தந்திரோபாயக் கொள்கையைத் தாங்கள் கொண்டிருப்பதாக ஜே.வி.பி/டி.ஜே.வி கூறிக்கொண்டது. இடதுசாரிகளைக் கடுமையாகத் தாக்கி- சோசலிச,ஜனநாய சக்திகளுக்கும் தங்களுக்கும் இடையில் அவர்கள் இரத்தத்தால் கோடு கீறினர். இப் போக்கு பாரம்பரிய இடதுசாரிக் கட்சிகள் செல்வாக்குப் பெற்றிருந்த தொழிலாளர் வர்க்கத்தின் ஸ்தாபனமயப்பட்ட விழிப்புணர்வு கொண்ட ஒரு பகுதியிடமிருந்து ஜே.வி.பியை மேலும் மேலும் அந்நியப்படுத்திவிட்டது.

அரசாங்கத்திற்கு ஆதரவாக இருந்து செயற்பட்டவர்களை இவர்கள் தொடர்ச்சியாகக் கொலை செய்து கொண்டிருந்த நேரத்தில் அரசாங்கத்தின் கொலைப்படைக் குழுக்களும் செயற்பட ஆரம்பித்திருந்தது. ஜே.வி.பி/ டி.ஜே.வியினர் தமது அரசியற் கொள்கையை ஏற்றுக் கொள்ளாத தொழிற் சங்கங்கள்,இடதுசாரிக் கட்சிகள் உள்ளிட்ட சகல அரசியற் கட்சிகள்,அவர்களது பத்திரிகைள் அனைத்திற்கும் தடைவிதித்தார்கள். மனிதஉரிமைகள் இயக்கம்,சமுக நிவாரணசேவை ஸ்தாபனங்களைக் கூட இவர்கள் விட்டுவைக்கவில்லை.இந்த அமைப்புக்களைச் சேர்ந்த அனைவர் மீதும் இவர்கள் கொலை மிரட்டல்களை மேற்கொண்டதுடன் அவற்றை நடைமுறைப்படுத்தவும் ஆரம்பித்து விட்டனர். அவர்களுடைய அரசியல்

*தயபால திராணகம*

கொள்கையோடு ஒத்துப் போகக்கூடிய சிறிலங்கா சுதந்திரக் கட்சி, மகாஜன எக்சத் பெரமுன போன்ற கட்சிகளைக் கூட அவை 1988 டிசம்பர் பொதுதேர்தலில் பங்குபற்றத் தீர்மானித்திருந்தன என்ற காரணத்தால் "துரோகிகள்" என்று ஜே.வி.பி யினர் முத்திரை குத்தினார்கள். இக்கட்சிகளின் தேர்தல் வேட்பாளர்களும் அவர்களுக்காக உழைத்த கட்சி அங்கத்தவர்களும் கொலை செய்யப் பட்டனர். இந்த நிலைமைகள் ஜே.வி.பி யை முன்னென்றும் இல்லாத மாதிரி அரசியல் ரீதியில் தனிமைப் படுத்துவதில் போய் முடிந்தது. இவர்கள் விசேசமாக கிராமப் புறங்களில் வேலை நிறுத்தங்களை ஆரம்பிப்பதிலும் ஆர்ப்பாட்டங்கள் நடத்துவதிலும்

www.tamilarangam.net




இப்போது இறங்க ஆரம்பித்தனர். கடந்த ஆண்டின் (1989) நடுப்பகுதியில் தாம் நிர்ப்பந்தித்த வேலை நிறுத்தங்களில் பங்கு கொள்ளாதவர்களையும் தாம் மேற்கொண்ட ஆர்ப்பாட்டங்களில் கலந்து கொள்ளாதவர்களையும் இவர்கள் கொலை செய்து விட்டனர்.

ஜே.வி.பியினர் அறிவித்த பொது வேலை நிறுத்தத்தில் பங்குபற்றவில்லை என்ற காரணத்திற்காக மட்டும் 250க்கு மேற்பட்ட பாடசாலை ஆசிரியர்களும் 200 பஸ் சாரதிகளும் சர்வ சாதாரணமாக சுட்டுக் கொல்லப்பட்டனர். அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் இயங்கும் "ரூபவாகினி" தொலைக் காட்சி நிலையத்தை இயங்கக்கூடாதென்று தாங்கள் தடைவிதித்து விட்ட பிறகும் அங்கு பணியாற்றினார்கள் என்ற காரணத்தால் திறமை வாய்ந்த தொலைக் காட்சி கலைஞர்கள் கொலை செய்யப்பட்டனர். ஜே.வி.பி யின் இந்த மரண தண்டனைகளும் கொலை மிரட்டல்களும் ஜனங்கள் மத்தியில் பயங்கரமான அச்சத்தையும் பீதியையும் ஏற்படுத்தியது. இவர்கள் ஆட்சி அதிகாரத்திற்கு வந்துவிடக்கூடிய சாத்தியமும் உள்ளது

www.tamilarangam.net

போல் இருந்ததால் மக்களும் பயந்து இவர்களுடைய கட்டளைகளுக்குப் பணிந்து நடக்க ஆரம்பித்தனர்.

ஜே.வி.பி.பொது மக்களைப் பற்றி கொண்டிருந்த கருத்து ஹிட்லர் ஜெர்மானிய மக்களைப் பற்றிக் கொண்டிருந்த கருத்தைத்தான் நினைவுக்கு கொண்டு வருகிறது. தான் விடுக்கும் கட்டளைகளுக்குப் பணிந்து நடக்க மட்டுமே லாயக்கான செம்மறியாட்டுக் கூட்டமாகவே ஹிட்லர் மக்களைக் கருதினான். இந்நிலையில் ஜே.வி.பி/ டி.ஜே.வி. யால் தடைவிதிக்கப்பட்ட அரசியல் கட்சிகள், மற்றும் அமைப்புக்கள், தனிநபர்களும் கூடத் தமது சுய பாதுகாப்புக் கருதி ஆயுதபாணிகளாக நேர்ந்தது.

ஜே.வி.பி/டி.ஜே.வி யினரை பாதுகாப்புப் படைகளாலும் அழித் தொழிக்க முடியாத நிலையில் அரசாங்கமோ ஒன்றும் செய்து கொள்ள முடியாத நிலையில் இருந்தது. 1989 யூலை மாதத்தில் அரசின் இராணுவப் படையைச் சார்ந்த அனைவரும் அந்த மாதக் கடைசிக்குள் தமது பதவிகளை ராஜினாமா செய்துவிட்டு வெளியேற வேண்டும் என்று ஜே.வி.பி காலக் கெடுவிதித்தது. அவர்கள் அவ்வாறு தங்கள் பதவிகளை ராஜினாமா செய்யவில்லை என்றால் அவர்களது குடும்பத்தவர்கள் படுகொலை செய்யப்படுவார்கள் என்றும் அவர்கள் அறிவித்தனர்.

இந்த அறிவித்தலுக்கு இராணுவப் படையினர் செவிசாய்க்காது போனதும் ஜே.வி.பி யினர் தாம் விடுத்திருந்த கொலை மிரட்டல் பிரகாரம் இந்த இராணுவப் படை வீரர்களின் குடும்பத்தினர், உறவுக்காரர்களைப் பெருமளவில் கொலை செய்ய ஆரம்பித்து விட்டனர்.

ஜே.வி.பி யின் இந்த கொலை பாதகச் செயல்களால் கொதிப்புற்ற ஆயுதப்படையின் சகல மட்டங்களைச் சேர்ந்தவர்களும் இந்தப் படுகொலைகளுக்கு மூர்க்கமாகப் பழிவாங்க ஆரம்பித்தனர்.

ஜே.வி.பி/ டி.ஜே.வி யின் உறுப்பினர்கள், ஆதரவாளர்களைக் கொலை செய்யும் படலம் இப்போது ஆரம்பித்து விட்டது. ஜே.வி.பி யினரின் சடலங்கள் வீதியோரங்களில் வீசப்பட்டுக் கிடப்பதும் ஆற்றில் மிதந்து செல்வதும் நாளாந்தம் நடை பெறும்

www.tamilarangam.net

நிகழ்ச்சிகளாகி விட்டன. இது இன்றும் எந்த தடங்கலும் இல்லாமல் தொடர்ந்து கொண்டிருக்கிறது. இந்த நெருக்கடியைத் தீர்ப்பதற்கு யு.என்.பி அரசு தீவிர இராணுவ ரீதியிலான அணுகுமுறையை கைக்கொண்டது.ஜே.வி.பி /டி.ஜே.வி போன்ற ஒரு அரசியல் அமைப்பு உருப் பெற்றதற்கான புறநிலை அரசியற் காரணங்களை அரசு விளங்கிக் கொள்ளவில்லை. கடந்த ஆண்டின் இறுதியில் ஜே.வி.பி தலைவர் ரோகண விஜயவீர உட்பட மேல்மட்ட தலைமைப் பீடம் முழுவதையுமே ஆயுதப் படையினர் அழித்து விட்டனர்.

## அரசின் கொலைப் படை.

இப்போது அரசாங்கத்தின் கொலைக் குண்டர் படையினர் மற்ற எதிர் தரப்பு அரசியற் கட்சிகளின் மீது தமது கைவரிசையைக் காட்ட ஆரம்பித்து விட்டனர். இடது சாரிகள் உட்பட அரசாங்கத்திற்கு எதிராகச் செயற்படும் அரசியற் கட்சிகளைச் சார்ந்த ஆதரவாளர்களையும் கொலை செய்த சம்பவங்களும் இடம் பெற ஆரம்பித்து விட்டன.

இலங்கையின் முழுச் சமூக அமைப்பையும் வன்முறையும் மரணமும் அச்சுறுத்தியது. சுயமாகமக்கள் தங்கள் கருத்துக்களைத் தெரிவிக்கும் உரிமையை ஆயுதக் குழுக்கள் எல்லாப் பக்கத்திலுமே இல்லாமல் செய்து விட்டன.

ஜே.வி.பி /டி.ஜே.வி.பி மேற் கொண்ட ஆயுத நடவடிக்கைகளின் ஜனநாயக விரோத பாசிஸ போக்கானது அரச ஆயுதப் படையினர் தமது கொலைகளை சரியென்று நியாயப்படுத்திக் கொள்ள வசதி செய்து கொடுத்தது. உண்மையில் அரசு ஆயுத முனையில் நடத்திய அட்டூழியங்களுக்கு ஜே.வி.பி யின் போக்கு அரசியல் நியாய அந்தஸ்தைத் தேடிக் கொடுத்தது.

ஜே.வி.பி/டி.ஜே.வி யின் இராணுவ வலிமையை நசுக்கியதும் அரசாங்கத்தின் ஆயுதப்படையினர் தமது வழமையான ஆதிக்க எல்லைகளுக்கு அப்பாலும் தமது வலிமையை விஸ்தரித்துக் கொள்ள ஆரம்பித்து விட்டனர். இது இப்போது தலையாய அரசியல் காரணியாக மாறிக் கொண்டு வருகிறது. இந்த அச்சுறுத்தும் நிலைமையே அடுத்த சில தசாப்தங்களில் இலங்கை மக்களின்

www.tamilarangam.net

அரசியல் விதியைத் தீர்மானிப்பதாக அமையப்போகிறது. மேலும் ஜே.வி.பி/டி.ஜே.வி.பி யினர் முன்வைத்த அரசியல் கோரிக்கைகளும் மாகாண சபைகளை நீக்குமாறும் தமிழ் மக்களுக்கு அதிகார பரவலாக்கம் வழங்கப்படுவதை எதிர்த்தும் செயற்பட்ட பிற இனவாத சக்திகளின் நிலைப்பாடுகளும் இலங்கை மண்ணில் இந்தியா தமது படைகளை நிலை நிறுத்திக்கொள்வதற்கு இந்தியாவிற்கு நல்ல சாட்டாக அமைந்தது.

இந்தியப் படைகள் இங்கு நிலைகொண்டமை இலங்கையின் அரசியல் வாழ்வு மேலும் ஒருபடி இராணுவமயமாவதையே துரிதப்படுத்தியது. எல்.ரி.ரீ.ஈ ஈ.பி.ஆர்.எல்.எப். இயக்கங்களுக்கிடையிலான மோதல்கள் பயங்கர அழிவுக்குத்தான் இட்டுச் செல்லும் என்பது உறுதியாகி விட்டது.

புலிகளுக்கெதிராக ஈ.பி.ஆர்.எல்.எப் பை இந்தியா இராணுவ ரீதியில் பலப்படுத்திய அதேநேரம் எல்.ரி.ரீ.ஈ இலங்கை அரசின் உதவியை நாடி நின்றது. ஏறத்தாழ எல்லா சக்திகளுமே ஒன்று மற்றக் குழுக்கள் மீது தாக்குதலை மேற்கொள்ளும் நோக்கிலோ அல்லது தற்காப்பு நோக்கம் கருதியோ ஆயுதமயமாக்கப்பட்டிருந்தன.

ஏதாவதொரு ஜனநாயக அரசியல் கருத்துப் பரிவர்த்தனைக்காக நிலவிய கொஞ்சநஞ்ச 'அரசியல் அவகாசத்தையும்' (கட்டுரையாசிரியர் இதனை *political space* என்று கூறுகிறார்) பயங்கரவாதமும் வன்முறையும் மரணமும் ஆக்கிரமித்துக் கொண்டு விட்டது. ஆயுத நடவடிக்கைகளால் இந்த அரசியல்



„இந்தியாவின் பாதுகாப்பு நலன்கள்" என்று ராஜீவ் இலங்கைக்குள் தன் மூக்கை நுழைக்கும்போதே „உடைபடும்" என அறியவில்லைப் போலும்!

www.tamilarangam.net

அவகாசமும் (அல்லது அரசியல் கருத்துப் பரிமாறல் செய்து கொள்வதற்கு திறந்திருந்த சின்ன இடை வெளி கூட) முடுண்டு போனதும் இன ரீதியான வேறுபாடுகள் மீண்டும் புதிதாய் தலை தூக்கின

ஒவ்வொரு இனத்திற்குள்ளும் குறுந்தேசியவாத உணர்ச்சிகள் ஆயுதரீதியில் வெறித்தனமாக வெளிப்பாடு கண்டபோது முன்னென்றுமில்லாதவாறு அவை ஒவ்வொரு சமுகத்தையும் எதிரும் புதிருமான துருவ நிலைக்குத் தள்ளியது.

## சுத்த இராணுவ வாதத்தைக் களைதல்

இந்த தேசத்தை அதன் அழிவிலிருந்து மீட்கும் ஒரு நடவடிக்கையாகவும்- இத் தேசத்தில் பல்லின மக்கள் வாழும் தன்மையை பேணிப் பாதுகாப்பதற்காகவும் அரசியல்ரீதியான கருத்துப் பரிவர்த்தனைகளை மேற்கொள்ள ஒரு அரசியல் அவகாசத்தை உருவாக்கி அதனை வளர்த்தெடுக்க வேண்டும்

ஜனநாயக உரிமைகள் ஏன்,எவ்வாறு பேணிப்பாது காக்கப்பட வேண்டும் என்றும் அதிலும் ஒடுக்கப்பட்ட மக்களுக்கு விசேசமாக தமிழர்களுக்கு அந்த உரிமைகள் விஸ்தரிக்கப்படவேண்டும் என்பது பற்றியும் நாடு தழுவிய பிரக்ஞை உருவாக்கப்பட வேண்டும்.

அரசியல் கருத்துப் பரிமாற்றத்திற்கான ஒரு சூழலை உருவாக்க வேண்டும். குறுந்தேசியவாத சக்திகள் ஆயுதம் தரிக்கும் வரை - அரசியல் கருத்துப் பரிமாற்றத்திற்கு வன்முறை என்ற ஒரேயொரு மொழியை விட வேறு ஒரு மொழியுமே இல்லை என்று அத்தகைய சக்திகள் கருதும் பட்சத்தில் நாம் மேலே கூறிய கருத்துப் பரிவர்த்தனை என்பது சாத்தியமே இல்லையாகி விடும். ஒவிவொரு சமுகத்தின் மத்தியிலும், அது சிங்களவர் மத்தியில் ஜே.வி.பி/டி.ஜே.வி.பி யாக இருந்தாலென்ன அல்லது தமிழர் மத்தியில் எல்.ரி.ரீ.ஈயோ அல்லது வேறு தீவிரவாதக் குழுக்களாக இருந்தாலென்ன, அவை நிலைகொண்டு ஆதிக்கம் பெறுவதை நாம் அனுமதித்தோமானால் நாடு இன்னும் இருண்ட அரசியல் சூனியத்தை நோக்கித்தான் செல்ல நேரும்.

மக்கள் தங்கள் கருத்துக்களை

www.tamilarangam.net

சுயமாக வெளியிடக் கூடிய ஜனநாயக, அரசியல் அவகாசம் இல்லாது போனால்-ஜனநாயக அமைப்பு இல்லையென்றாகி விட்டால் அதிகாரத்தை அவாவி நிற்கும் வன்முறை ஆயுதக் குழுக்கள் இந்நிலையில் பாரதுாரமான தீமைகளையே கொணர்ந்து சேர்க்கும்.

இலங்கையில் இன்றைய சூழலில் இத்தகைய ஒரு சாத்தியப்பாடு இல்லை என்று முற்றுமுழுதாக நிராகரித்து விடமுடியாது. எனவேதான் சுத்த இராணுவ வாதத்தைக் களையும் ஒரு செயற்பாடு நம்முன்னுள்ள உடனடிப் பணியாக உள்ளது. சுத்த இராணுவ வாதத்தைக் களையும் இந்த நடவடிக்கையில் அரசின் பொறுப்புத்தான் மிகவும் பாரியது.இன்றைய இந்த நெருக்கடி நிலை தோன்றியதற்கான மூல காரணங்களைத் தேடி அவற்றை நீக்குவதற்கான முயற்சியில் அரசு உண்மையிலேயே தன்னை ஈடுபடுத்திக் கொள்ளவேண்டும்.

சிங்கள பௌத்த தத்துவார்த்தத்திற்கும் பாரம்பரியத்திற்கும் முண்டு கொடுக்கும் அரசின் போக்கு ஒரு முற்றுக்கு கொண்டுவரப்பட வேண்டும். பல் இன மக்களும் பல் தேசியக் கலாசாரமும் இன்று அரசியல் ரீதியில் உணர்வுபூர்வமான பிரச்சனைகளாகி விட்ட இலங்கை போன்ற ஒரு தேசத்தில் அரசும் அரச யந்திரமும் மதச்சார்பற்ற கொள்கையை கடைப்பிடிக்க வேண்டும் என்பது ஒரு வெளிப்படையான உண்மையாகும். நமது அரசியல் வாழ்க்கையிலிருந்து சுத்த இராணுவ வாதத்தைக் களைந்தெறிவதற்கு தமிழர்களுக்கு அரசியல் அதிகாரப் பரவலாக்கத்தினை வழங்குவது அத்தியாவசிமானதாகும் இலங்கை அரசியலை ஜனநாயக மயமாக்கும் நடவடிக்கையுடன் இது இணைந்து செயற்பட வேண்டும்.

இன்றைய நெருக்கடியான தீர்வை இராணுவ ரீதியிலான வெற்றி அல்லது தோல்வி என்ற அர்த்தத்தில் பேசிக் கொண்டிருந்தால் அழிவுதான் மிஞ்சும். இன்றைய இந்தப் போராட்டத்தில் யார் வென்றாலும் அது அரசாக இருந்தாலென்ன, வேறு ஆயுதக் குழுக்களாக இருந்தாலென்ன அந்த வெற்றி பொது மக்களின் விடுதலையின்,சுதந்திரத்தின் அழிவில் தான் பெறப்பட்டிருக்கிறது என்றுதான் அர்த்தம்.யாரோ ஒரு சாரார் வெற்றி அடைகின்றனர் அல்லது தோல்வியைத் தழுவுகின்றனர் என்றால் மறுசாரார் ஆயுதமுனையில் ஒடுக்கப்படுகிறார்கள்

www.tamilarangam.net

என்றும் ஜனநாயக அரசியலுக்கான சிறிய வாயில் கூடமுடப்பட்டு விட்டது என்றுதான் அர்த்தமாகும். வருகின்ற காலங்களில் இலங்கை சமூகத்தின் புரட்சிகரமான மாற்றங்களுக்கான நடவடிக்கைகளை பாரதூரமாக பின்தள்ளச் செய்யும் நிலையையே இது கோடி காட்டுகிறது. ஒவ்வொரு இனவாரி சமுகமும் அடையவேண்டிய வளர்ச்சியுடனும் அதற்கப்பாலும் முழு இலங்கையினதும் பரந்துபட்ட வளர்ச்சி பற்றிய கண்ணோட்டத்திலிருந்தும் இந்த இராணுவ வாதத்தைக் களையும் நடவடிக்கை மிக இன்றியமையாததாகும்.

இன்று ஏற்பட்டுள்ள நெருக்கடியை ஒரு புரட்சிகரமான நெருக்கடிச் சூழலாகக் கருதுவதற்கில்லை. ஜே.வி.பி/டி.ஜே.வி பினர் முன்வைத்துள்ள அரசியற் கோரிக்கைகள் தற்போதைய அரசியல் நெருக்கடியின் தன்மையானது சாராம்சத்தில் பாசிஸத்திற்கு முன்னைய காலகட்ட குணாம்சங்களையே கொண்டுள்ளது என்பதையே வெளிப்படுத்துகின்றன. ஜே.வி.பி/டி.ஜே.வி தலைமையை அழித்து விட்ட பிறகு அரசினது ஆயுதப்படையினர் உண்மையான அரசியல் அதிகாரத்தினைக்கொண்டவர்களாகத் திகழ்வது சாத்தியமே. ஏனெனில் சிவில் சமுகம் அரைகுறையாகக் கூடச் செயற்படுவதைக் காணோம். அது செயலிழந்து ஸ்தம்பித்து நிற்கிறது. எனவே இராணுவவாதத்தைக் களைவதுதான் இன்றைய நெருக்கடிக்கான தீர்விற்கு நம்முன்னுள்ள ஒரே ஒரு வழியாகும். ஜனநாயகத்தை விஸ்தரிப்பது தொடர்பாக பேசும்போது, தற்போது நடை முறையில் உள்ள அடக்குமுறைச் சட்டங்களான பயங்கரவாத தடைச் சட்டம், நட்டஈட்டு உத்தரவாத மசோதா மற்றும் அவசரகால சட்டங்கள் போன்றன நீக்கப்பட வேண்டுவது மிகவும் அடிப்படையானதாகும்.

ஏனெனில் இந்த சட்டங்களே இராணுவ நடவடிக்கையின் போது ஆயுதப்படையினருக்கு கேள்விக்கு இடமில்லாத அதிகாரங்களை வழங்குகிறது. இதே அடக்குமுறைச் சட்டங்களையே அரசானது ஜனநாயகரீதியில் செயற்படும் எதிர்கட்சியினை நோக்கியும் பிரயோகித்துள்ளனர். ஜே.வி.பி/டி.ஜே.வி. அல்லது எல்.ரி.ரி.ஈ.ன் இராணுவவாதத்தை தார்மீக ரீதியில் நியாயப்படுத்தவே இது துணை

www.tamilarangam.net

புரிந்துள்ளது. இலங்கையின் பின்னணியில் இராணுவவாதத்தைக் களைதல் என்பது அரசியல் யாப்பு ரீதியிலான மாற்றங்களோடு முன்னெடுக்கப் படவேண்டும். இன்று ஆட்சியிலிருக்கும் அரசு இந்த பிரச்சனைகளைத் தீர்த்து வைக்க முடியாத ஒரு கையாலாகாத் தன்மையையே காட்டி நிற்கிறது. எனவே இந்த அரசாங்கம் வெளியேற வேண்டுவதும் பொதுத் தேர்தலை நடத்துவதும் அவசியமானதாகும்.

ஆயுதக் குழுக்கள் நிலைபெற்றுக் கொண்டிருக்கும்வரை, அவை நிலை பெறுவதற்கான அரசியல் சூழ் நிலைகள் அப்படியே நிலவும் வரை பொது தேர்தல் என்பதிலும் அர்த்தம் எதுவும் இல்லைதான். இதனால் தான் இராணுவ வாதத்தைக் களைதல் என்பது மிகவும் கடினமான காரியமாகவும் மாறியுள்ளது. சோசலிச சனநாய சக்திகள் தமிழர்களது உரிமைகளைப் பொறுத்தவரை ஒரு திட்டவட்டமான கொள்கை அடிப்படையிலான நிலைப்பாட்டை எடுப்பதன் மூலம் இந்த இராணுவவாதத்தைக் களையும் நடவடிக்கைக்கு பெருந் துணை புரிய முடியும். இவர்கள் சிங்கள பௌத்த தத்துவார்த்தத்திற்கு எதிராக கோட்பாட்டு ரீதியிலும் அரசியல் ரீதியிலும் உறுதியான போராட்டத்தைக் கொண்டு நடத்த வேண்டும். இது சாத்தியமில்லை யென்றாகிப் போனால் ஒவ்வொரு இனத்திற்குள்ளும் பின் இனங்களுக்கிடையேயும் ஆயுத மோதல்கள் தொடர்ந்து நீடிக்கவே செய்யும். இத்தகைய கோட்பாட்டு ரீதியான- அரசியல் போராட்டம் என்பது உடனடியாகச் செய்து முடித்து விடக் கூடிய காரியமில்லைத் தான். சிங்கள பௌத்த மேலாதிக்கவாத சக்திகள் லேசில்

(தொடர்ச்சி 52 ஆம் பக்கம்)

---

*DEMILITARISATION OF POLITICS IN SRI LANKA: AN URGENT AND DIFFICULT TASK*

என்ற தலைப்பில் *Dayapala Thiranagama* எழுதி *INQUILAB (SPRING 1990, VOL:1, NO:1)- LONDON* காலாண்டு சஞ்சிகையில் வெளியான ஆங்கிலக் கட்டுரையின் தமிழாக்கம்.

---



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தூண்டில் என் பார்வையில்

மேற்கு ஜேர்மெனியில் வெளிவரும் சஞ்சிகைகளின் தோற்றத்திற்குச் சமூகத் தேவையே அடிப்படையாக அமைந்துள்ளது. இச் சஞ்சிகைகளுள் என்னைக் கவர்ந்தது தூண்டில்.

மிகப் பெரிய சிக்கல் நிறைந்த சமூக அமைப்பை ஊடுருவிநோக்கும் தன்மையைத் தூண்டில் பெற்றுவருவதோடு, ஒரு பரந்த உலகக் கண்ணோட்டத்தையும் தன்னுள் வளர்க்கிறது.

ஒரு புகலிடச் சஞ்சிகையாக இருந்தாலும் தமிழ்ச் சமூகத்தின் புதிர்களைப் புரியவைக்க முயற்சிப்பதோடு, புதிய எண்ணங்களையும், கருத்துகளையும் தன்னுள் கொண்டிருக்கிறது.

தூண்டிலின் வளர்ச்சிப் போக்கில் கலங்கள் 34,35 புது வடிவம் பெற்றிருப்பதை அவதானிக்கக் கூடியதாயுள்ளது.

இராமநாதன் தொடக்கம் த.வி.கூ. வரையிலான பாராளுமன்றக் காலங்கள் அனைத்துமே தமிழினத்தின் அரசியல் வெற்றிடங்கள்தான். இவ்வுண்மையை அளவுகோலிட்டுக் காட்டி பின்னால் வந்த ஆயுத பாணி இயக்கங்களும் அதே வெற்றிடத்தையே மேலும் தீவிரப்படுத்தினவேயன்றி ஓரளவுக்கேனும் வெற்றிடங்களை நிரப்ப முயற்சித்தனவா? உண்மையை தேடினார்களா?

இங்குதான் சமூகத்தையும், சிக்கலான சமூக அமைப்பையும் நிர்வகிப்பவர்களை நேரடியாக ஊடுருவிப் பார்க்க தூண்டில் போன்ற சஞ்சிகைகளால் முடிந்தது.

இது மனிதரின் தேடலுக்கான தொடர்பயணம். ஆகவே இன்று நிலவும் மனிதச் சிந்தனையானதும் கூட முற்றும் உண்மையென்றும் சொல்வதற்கில்லை. ஆனால் புதிய கருத்துகளும், எண்ணங்களும், கண்டுபிடிப்புகளும் மனிதச் சிந்தனையின் மாற்றத்திற்கான முன்னேற்றப் பாதையேயாகும்.

மேற்கூறிய கண்ணோட்டத்தினடிப்படையில் தூண்டில் ஒரு சமூகக் கண்ணாடி எனச் சொல்லலாம். தமிழ் சமூகத்தின் புதிய விழிப்பு யுகம் வெளிநாடுகளில் வாழும் தமிழர்களினூடும் ஒரு புதுவடிவத்தைப் பெற்றுக் கொள்ளும். இதன் மூலம் தரமான படைப்புகள் தோற்றம் பெறுவதோடு புதிய கருத்துகள் மக்களை சென்றடையவும் வாயப்பிருக்கிறது.

தூண்டிலின் மீது வைக்கப்படும் விமர்சனங்களும், தூண்டில் முன் வைக்கப்படும் விமர்சனங்களும் காலத்தையொட்டி அமைந்திருக்கும் அடிப்படை அம்சங்களாகும். இவ் வகை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

விமர்சனங்கள் தமிழ் சமூகத்தைஒரு சேர்க்கை ஆய்வுக்குட்படுத்துவதாக நான் இனங்காண்கிறேன்.

வைக்கப்படும் விமர்சனங்கள் தூண்டிலின் வளர்ச்சிப் போக்கின் ஒரு பாய்ச்சல். இது முற்றிலும் வரவேற்கத்தக்கதாகும்.

தூண்டில் பற்றிய விமர்சனங்களும், வளர்ச்சிப்போக்குகளும் தமிழ்ச் சமூகம் வேண்டப்படுவவே தவிர வக்கரித்து ஒதுக்கித் தள்ளவேண்டியவையல்ல.

தமிழ்ச் சமூகமும், அதன்தலைமைகளும் தம்மை ஒரு மறுபரிசீலனை செய்வதற்கு வேண்டப்படுவன. சமூகத்தின் பண்பாடு, கலாச்சாரம் போராட்டம் அனைத்துமே புதிய பரிணமக் கட்டங்களுக்கு நகரவேண்டிய தேவையுள்ளது.

- அரு. சிவேந்திரன்

# எது நியாயமானது!

- ஜனார்த்தன்

கலங்கள் 34, 35ஐப் பார்த்தபின்பு 'தூண்டிலின் போக்கு' சம்பந்தமாக எழுதவேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

கொலைக்களத்தில் மனிதர்கள் பலியாகிக்கொண்டிருக்கும் ஓர் தேசமாக இலங்கை. அதைத் தோரணம் கட்டி, விழாக் கொண்டாடும் மனிதர்களாக பலர் இங்கே.

விடுதலை இயக்கத்தைப் பற்றிய அல்லது அந்த இயக்கத்தினால் முன்னெடுக்கப்படுகின்ற போராட்டத்தைப் பற்றிய எந்த வரைவிலக்கணங்களையும் அறியமுடியாமல் சினிமா பார்த்த கதையாக அந்தப் பாதை சிறந்ததா? இந்தப் பாதை சிறந்ததா? எனக் கதைப்பதும், அவர்கள் கூடக் கொன்றார்கள், இவர்கள் குறையக் கொன்றார்கள். அதனால் கூடக் கொன்றவர்களே போராடத் தகுதியுடையவர்கள் என முடிவெடுப்பதும் எவ்வளவு அறிவீனமான செயல் என்பதை இயக்க விசிறிகள் தெரிந்துகொள்ள வேண்டும்.

அமைதி அழிக்கப்பட்ட பின்பு காடுகளில் வாழ்ந்துகொண்டு ஓலங்கள் எழுப்புகிறார்களே எமது மக்கள். இந்த அவல நிலை யாரால் நிகழ்ந்தது?

இலங்கை அரசினால் மட்டுமல்ல, இயக்கங்களினாலும்தான்.

www.tamilarangam.net

இலங்கை, இந்திய அரசுகளுடன் எந்த இயக்கம்தான் கூட்டுச்சேரவில்லை? ரேுவின் செல்லப் பிள்ளையாக யார்தான் இருக்கவில்லை ? தொலைந்துபோன நாட்களை ஓர் தடவை புரட்டிப் பார்த்தால் உண்மைகள் புலப்படும்.

மொசாட்டுடன் இலங்கையரசுக்கு நிகராக உறவாடியதும், இஸ்ரேலிலேயே பயிற்சியும் எடுத்ததும் இன்று வெளிச்சத்திற்கு வந்துகொண்டிருக்கின்றன.

பாவிகளாக, பரிதாபத்திற்குரியவர்களாக மாற்றப்பட்டவர்கள் எங்கள் மக்களே. யாரால் கொல்லப்படுகிறோம் என்பதைத் தெரிந்துகொள்ளாமல், ஏன் கொல்லப்படுகிறோம் என்பதைப் புரிந்துகொள்ள முடியாமல் பலர் கொல்லப்பட்டார்கள். தெருவிலே, ஆற்றிலே வீசப்பட்டார்கள். உயிரோடு எரிக்கப்பட்டார்கள். பலர் காணாமற்போய் விட்டார்கள். அரசினதும், இயக்கத்தினதும் சிறைகளிலே சித்திர வதைகளோடு சாவுக்காக காத்துக்கொண்டிருப்பவர்கள் எத்தினை ஆயிரம்.

இந்நிலையில் , பயத்தில் தங்களுக்கு ஆதரவளிப்பவர்கள் மட்டும் தான் மக்கள், ஏனையவர்கள் துரோகிகள் எனப் படிப்பறிவுக்கு முடிவுகட்டி கொலை செய்வதற்கே தயாராயிருக்கும் அனைத்துக் குழுக்களையும் விடுதலை இயக்கங்கள் என்று அழைப்பது விடுதலை இயக்கம் எனும் பதத்தினையே கொச்சைப்படுத்துவதாகும்.

இன்றைய நிலையில் கொலை செய்வதற்கான தகுதி யாருக்குகூட இருக்கிறது எனப் பார்த்தால் உகந்த விடை கிடைக்கலாம். ஆனால் போராடும் தகுதி எந்த ஆயுதக் குழுவுக்கு உண்டு என்ற கேள்விக்கு வனங்களிலே பாம்புகளுடன் வாழுகின்ற மக்களும், தென்னிந்தியக்கடற் கரைகளிலே கடத்தல், விபச்சாரம் என்ற பயங்கரமான சூழலிலும் வாழுகின்ற மக்களும் பதில் சொல்லி விட்டார்கள்.

இனியென்ன, குண்டி மண்ணைத் தட்டிவிட்டு எழுவதைப் போன்று , சொந்த மண்ணைத் தட்டிவிட்டுவந்த நாம் இங்கேயாவது உண்மையைப் பேசலாமே? நாட்டிலுள்ள மனிதர்களுக்காய் இயங்கலாமே?

இன்றைய சூழ்நிலையில் எந்த போக்கு முற்போக்கானது என்பதைவிட, எந்தப் போக்கு மனிதாபிமானமுள்ளது என்பதுதான் முக்கியமான கேள்வி.

எல்லா ஆயுதக் குழுக்களையும் நிராகரிக்கும் தன்மையே இக் கேள்விக்கான பதிலாக இருக்கிறது

சாவு அழைக்கின்ற வாழப் போராடிக்கொண்டிருக்கிற எனது தேசத்து மனிதரை விடவும், இங்கே வாழ்கின்ற என்னை மெலிதாகவாவது சுதந்திரக் காற்று தழுவத்தான் செய்கிறது. இந்த வாய்ப்பினை , சொல் இழக்காத இந்தத் தன்மையினை ஏன் நாட்டிலே அல்லல்படுகின்ற மக்களுக்காக, மக்களை இந்த நிலைமைக்கு ஆளாக்கிய ஆதிக்கவாதிகளை அம்பலப்படுத்துவதற்காகப் பாவிக்கக்கூடாது என்ற கேள்வி என்னுள் எழுகின்றது.

இந்தக் கேள்விக்கான பதி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

லாகத்தான் நான் தூண்டிலின் போக்கைக் காண்கிறேன்.

இந்தப் போக்கினுல் மாத்திரம் ஓர் மாற்றம் ஏற்பட்டுவிடப் போவதில்லைத்தான். என்ருலும் கூட எந்த உண்மையான செய்திகளையும் அறிய முடியாமல் வாழ்கின்றவர்களுக்கு தூண்டில் நிச்சயம் உதவலாம்

அடுத்ததாக என்ன செய்வது? வெறுமனே இப்படியே எழுதிக் கொண்டிருப்பதா? என்ற கேள்விகள் எழுவது இயற்கையே. கேள்வி கேட்பவர்கள் எல்லோரும் தூண்டிலுக்கு ஊடாக இணைந்துகொண்டால் என்ன? கேள்விகளுடன் நின்று கொள்ளாமல் பதிலையும் தேடும் செயற்பாடுகளில் ஒன்ருக இதைக் கொள்ளலாமல்லவா? அப்போது எதிர்காலப் போக்கை நிர்ணயிப்பதில் நாங்களும் பங்கெடுத்துக் கொள்ளலாம்.

( 49 ஆம் பக்கத் தொடர்ச்சி)

விட்டுக் கொடுத்து இணங்கிப் போகக் கூடியன அல்லவாதலால் இந்த செயல் முறை சிறிது மெதுவாகவே நடை பெற முடியும். இத்தகைய ஒரு போராட்டம் இல்லாமல்- சகல இன சமூகமும் சமத்துவமான அரசியல் உரிமைகளைக் கொண்டமைகின்ற ஒரு உண்மையான இலங்கைத் தேசியவாத தத்துவார்த்தம் ஒருநாளுமே சாத்தியமாகாது. ஆயுதக்குழுக்கள் ஆதிக்கம் வகிக்கும் வரை அந்நிலை இத்தகைய அரசியல், ஜனநாயகப் பணிக்கு குந்தகமாகவே அமையும்.

தொடர்ந்தும் உங்கள் கருத்துகளை இப் பகுதியில் எதிர்பார்க்கிருேம்.

தூண்டிலின் போக்கு பற்றிய விமர்சனங்களாக மட்டுமே அமையாமல், இன்றைய நிலையில் வெளிநாடுகளில் உள்ளவர்கள்/சஞ்சிகைகள் செய்யவேண்டியவை பற்றிய கருத்துகளாகவும் அமைவது வரவேற்கத்தக்கது.

— கடலோடிகள்

இக் கட்டுரை பற்றிய உங்கள் கேள்விகளை இயலுமானளவு விரைவில் தூண்டில் முகவரிக்கு அனுப்பிவையுங்கள்.


கேள்விகள் கிடைக்கப்பெற்றதும் தயபாலவின் பதில்களுடன் பிரசுரமாகும்.

— கடலோடிகள்

www.tamilarangam.net



# வித்தியார்த்தியின்




இந்தியாவில் சாதி அடிப்படையிலான இட ஒதுக்கீட்டை எதிர்த்து தீக்குளித்து இறந்த மாணவர்களின் குடும்பங்களுக்கு தி.மு.க தலைவர் கருணாநிதி நன்கொடை வழங்குவதாக இந்திய சஞ்சிகையில் படித்த வித்தியார்த்தி புரிந்துகொண்டது தீக்குளித்தால் நன்கொடை கிடைக்கும் என்பதுதான்.

எதிர்க்கட்சித் தலைவியின் துகிலையுரிந்து சட்டசபைக்கு பெருமையைத் தேடிக் கொடுத்த கலைஞர், இப்போது பிணங்களுக்கு போனஸ் வழங்கி, தீக்குளிப்பைப் புனிதப்படுத்தும் காடைத்தனம் வித்தியார்த்திக்கு ஆத்திரத்தைக் கொடுத்தது

மாணவர்களின் பிரச்சினையை எப்படித் தீர்ப்பது என்றோ, தீக்குளிக்கும் மாணவர்களைத் தடுத்து நிறுத்தவேண்டுமென்றோ இந்த அரசியல்வாதிகள் யோசிக்கவே மாட்டார்கள்.

இட ஒதுக்கீடு பற்றிய சட்டம் தாழ்த்தப்பட்டோர் என்று கூறப்படும் மாணவர்களுக்கு நன்மையானதா? இந்த ஒதுக்கீட்டை எதிர்த்து தீக்குளிக்கும் மாணவர்களின் போராட்டம் நியாயமானதா? என்ற கேள்விகளும் வித்தியாத்தியை அரிக்காமலில்லை.

இலங்கையில் மட்டுமல்லாமல் இந்தியா உட்பட ஏனைய நாடுகளிலும் மக்களைக் கொலை செய்து அந்தப் பிணங்களை வைத்துத் தமது அரசியல் பிழைப்பை நடத்தும் இப்படியான அரசியல்வாதிகள் தான் தீக்குளிக்கவேண்டியவர்கள். அதற்கான நெருப்பை வைத்திருக்கும் மக்களிடமே அவர்கள் விளையாடிக்கொண்டிருக்கிறார்கள் என்று வித்தியார்த்தி எண்ணிக்கொண்டான்.

*          *          *          *

இலங்கைக்குக் கடிதம் போடப்போனபோதுதான் வித்தியார்த்தியின் கண்களில் அந்தச் சுவரொட்டிகள் கண்ணில் பட்டன. டிசம்பர் 2ஆம் திகதி நடக்கவிருக்கும் முழு ஜேர்மனிக்குமான தேர்தலுக்கான 'றிய பப்ளிக்கானு'வின் பிரச்சார

www.tamilarangam.net

நோட்டீஸ் அது.

போலி அகதிகளாலேயே இந்நாட்டில் வீடில்லாப் பிரச்சினை ஏற்பட்டுள்ளதாம்!

ஜேர்மெனியில் வீடில்லாப் பிரச்சினை இருப்பது உண்மையென்றலும், அதற்கும் அகதிகளுக்கும் முடிச்சு போடுவதை வித்தியார்த்தியால் ஒத்துக்கொள்ள முடியவில்லை.

15 சதுர அடிக்குள் 8 அல்லது 10 கட்டில்கள் போட்டு, 15 இலிருந்து 20பேருக்குமேல் ஒரு குசினி, ஒரு கக்கூஸ் கொடுத்து 40, 50 என்று எல்லாநாட்டு அகதிகளையும் ஒன்றாகக் கலந்து அடைக்கப்பட்டிருக்கையில் இந்த அகதிகளால் எப்படி வீடில்லாப் பிரச்சினை ஏற்படுகிறது என்பதை வித்தியார்த்தியால் விளங்கிக்கொள்ளமுடியவில்லை.

அரசியல், பொருளாதார பிரச்சினைகளாலும், உயிரைக் காப்பாற்றிக் கொள்வதற்காகவும் மூன்றும் உலகநாடுகளிலிருந்தும், கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலிருந்தும் அரசியல் தஞ்சம் கோரி, இந்த நிலைக்கான காரணிகளில் பெரும் பங்கு வகித்து வளர்ச்சியடைந்துள்ள மேற்குநாடுகளுக்கு வந்த அகதிகள் இங்கும் கரி ஏற்றிச் செல்லும் கப்பல்களிலும், தெருவோரக் கூடாரங்களிலும், பாழடைந்த கட்டிடங்களிலும் தங்கவைக்கப்பட்டுள்ள உண்மைநிலையைத் திரித்து அகதிகள் மேல் ஜேர்மென் மக்களின் வெறுப்பைத் திருப்பவே நாஸிகள் இப்படி ஒரு சுவரொட்டியைத் தயாரித்திருக்கிறர்களென்பதை வித்தியாத்தியால் சுலபமாகவே புரிந்துகொள்ள முடிந்தது.

பிரச்சினைகளுக்குரிய அடிப்படைக் காரணங்களை யாரும் கண்டு பிடித்துவிடக் கூடாதென்பதிலும், அப் பிரச்சினைகளை எப்படித் தங்களுக்குச் சாதகமாக்கிக் கொள்ளலாம் என்பதிலும் மிதவாத, வலதுசாரி அரசியற் கட்சிகளுக்கும், நாஸிகளுக்கும் வேறுபாடில்லை என்பதும் வித்தியார்த்திக்குப் புரியாமலில்லை.

*          *          *          *

கவிஞர்கள் ஒன்று கூடி
களம் ஒன்று அமைத்து
கடவுளில் இருந்து
காமம் வரையும்,
கட்டப்பொம்மனிலிருந்து
காக்கவன்னியன்வரையும்
கதைத்து முடித்தனர்
காற்சட்டையைக்
கறையான் அரிக்கும்வரை.

கனடாவிலிருந்து வெளிவரும் தேடல் சஞ்சிகையில் வெளிவந்த இனியனின் இந்தக் கவிதை வித்தியார்த்திக்கு மிகவும் பிடித்த கவிதைகளில் ஒன்று.

பிரச்சினைகளில் தங்களை ஈடுபடுத்தாமல், யதார்த்தங்களைக் கண்டுகொள்ளாத கனவுகளில் மிதந்துகொண்டிருப்பவர்களைப் பற்றிய சரியான கணிப்பே அந்தக் கவிதை என்று வித்தியாத்திக்குத் தோன்றியது. கூடவே இப்படியானவர்களுக்கு எப்போது சுரணை வரும் என்றும் கேள்வியெழுந்தது.

இது இப்படியிருக்க, ஆயுத



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வன்முறைகளினால், திசை திரும்பிய துப்பாக்கிகளின் முன்னால் எதுவும் செய்யமுடியாமல் செயலற்றுப் போயிருப்பவர்களைப் பற்றிக் கவிதை எழுதினால் —

கவலை மக்கள் பற்றய.தென்
—றலோ
கவனம் விடுதலை, சமூகமாற்
—றம் என்றிருந்தாலோ
கட்டித் தூக்கித் தட்டி விடு
—வார்கள் என்பதால்
களம் அமைத்துக்
கதைத்துக்கொண்டிருந்தனர்
கவிஞர்கள்
காற்சட்டையைக்
கறையான் அரிப்பதையும்
கவனியாமல் !

என்று வருமோ என தனக்குள் நினைத்துப் பார்த்தபோது வித்தியார்த்திக்கு சிரிப்பும், அழுகையும் வந்தது.

*  *  *  *

புற்று நோயால் பீடிக்கப்பட்டு மரணப்படுக்கையில் கிடந்த தமது தாயை, அவரின் 2 பிள்ளைகளும் கொலை செய்த வழக்கை 'கருணைக் கொலை' என்று தள்ளுபடி செய்து, அவர்களை நீதிமன்றம் விடுதலை செய்துள்ளதாக பி.பி.சியில் சொன்னபோது வித்தியார்த்தியும் கேட்டான். சம்பவம் நடந்தது இலண்டனில்.


இலங்கை அரசினால் ஒரு மாவட்டத்தில் மட்டுமே சராசரி நாளொன்றுக்கு 20க்கு மேற்பட்ட பொதுமக்கள் கொல்லப்படுவதைப் பற்றி இந்த பி.பி.சி.யோ, வேறு வெளிநாட்டு தொலைக்காட்சி, வானொலி, பத்திரிகைகளோ எந்த அக்கறையும் காட்டவில்லை என்பதை வித்தியார்த்தி அறிவான்.

எதியோப்பியாவில் மக்கள் ஆயிரக்கணக்கில் பட்டினிச் சாவால் இறந்தபோது சம்பிரதாயத்திற்குத் துக்கம் தெரிவித்த ஏகாதிபத்திய, முதலாளித்துவ நாடுகள் எல்லாம் ரஷ்யாவில் பட்டினி என்றதும் விழுந்தடித்து, பெரிதாக விளம்பரப்படுத்தி, அந்த நாட்டை விழுங்கி விடுவதற்காகவே உதவிகளை வாரி வழங்கிக் கொண்டிருப்பதையும் வித்தியார்த்தி அறிவான்.

பட்டினிச் சாவுகள், இன அழிப்புகள், மக்களுக்கு எதிரான அரச பயங்கரவாதங்கள், ஆக்கிரமிப்புகள் என்பவை அவை எந்த நாடுகளில் இடம்பெறுகின்றன என்பதைப் பொறுத்தே முக்கியத்துவம் பெறுகின்றன என்பதையே வித்தியார்த்தியால் இதன் மூலம் தெரிந்துகொள்ள முடிந்தது.

—இரா. செல்வத்துரை

www.tamilarangam.net



(கலம் 35 இன் தொடர்ச்சி)

...அடுத்துப் புலிகளை நிரந்தரத் தலைமையாக்கும் இந்திய அரசின் நோக்கம் .. பற்றிய கட்டுரையாளரின் கருத்து.
(கலம்: 34 ; பக்கம்: 21)

தமிழ்த் தேசிய விடுதலை முன்னணி போன்ற இடது சாரிப் போக்குடைய சிறு இயக்கங்கள் சிலவற்றைத் தவிர ஏனைய அனைத்து இயக்கங்களுமே ஆயுதம் ஆயுதப் பயிற்சி, நிதி, உளவு... போன்ற உதவிகளை இந்தியாவிடமிருந்து முழுமையாகப் பெற்றுகொண்டன. கட்டுரையாளர் குறிப்பிட்டதுபோல் தவிர்க்க முடியாத நிலைமைகளிலும்.

எனினும் உதவி பெற்றுக் கொண்ட ஏனைய இயக்கங்களை போல புலிகள் தம்மிடம் மட்டும் முழுமையாகத் தங்கியிருக்காமல் வேறு 'சக்தி' களுடனும் தொடர்பு வைத்திருக்கிறார்களென்பதைத் தெரிந்து கொண்டதும் இந்திய அரசு தன்னை உசார் படுத்திக்கொண்டது. இதன் பின்னரே டெலோவை முற்று முழுதாக தமது நம்பிக்கைக்குரியதாக வளர்த்து புலிகளின் பலத்திற்கு நிகராக்கி வந்தது.

இந்தக் கட்டத்தில்தான் டெலோ மீதான புலிகளின் அழிப்பு நடவடிக்கை ஆரம்பமாகியது.

இதனால் இந்திய அரசு புலிகள் தம் பிடியிலிருந்து விடுபடுகிறார்கள் என்று அறிந்துகொண்டாலும், தமக்கெதிரான நடவடிக்கைகளில் இந்திய அரசு ஈடுபடுகிறது என்பதைப் புலிகள் தெரிந்துகொண்டாலும் தமது தொடர்புகளை இரு பகுதியனரும் முற்றுகத் துண்டித்துவிடவில்லை.

டெலோ அழிப்புக்கான காரணமாக டெலோவின் சமூக விரோதச் செயல்களையே பலமான காரணிகளாக புலிகள் முன்வைத்தனரேயன்றி, இதன் பின்னணியிலிருந்த இந்திய அரசின் - நோக்கங்களையல்ல.

புலிகளைப் பலவீனப்படுத்தத் தருணம் பார்த்திருந்த இந்திய அரசு வடமாராட்சியில் இலங்கையரசின் 'ஒப்பிரேசன்-லிபரேசன்' தாக்குதல் நடந்த போது இலங்கை இராணுவத்தின் பலம் பற்றிப் பிழையான தகவல்களை புலிகளுக்கும், புலிகளின் பலம் பற்றி சரியான தகவல்களை இலங்கை இராணுவத்திற்கும் 'றோ' மூலம் வழங்கியது. அத்துடன் புலிகளுக்கு உறுதியளித்திருந்தபடி ஆயுதங்களை

www.tamilarangam.net

வழங்காமல் ஏமாற்றிவிட்டது. இந்நிலையிலேயே புலிகள் பின்வாங்கினர்.

எனவே புலிகளை நிரந்தரத் தலைமையாக்குவது இந்திய அரசின் நோக்கமாக இருந்திருக்கமுடியாது என்பது நிரூபணமாகிறது.

... அடுத்து மாகாணசபையில் பங்குபற்றிய இயக்கங்களைக் -கொண்டு அனைத்து மக்கள் விரோதச்செயல்களையும் செய்வித்து, மனித குலத்திற்கே விரோதிகளாக்கி அந்நியப்படுத்தும் நடவடிக்கையில் இந்திய முதலாளித்துவம் வெற்றிபெற்றது என்று கட்டுரையாளர் குறிப்பிட்டுள்ளார்...
(கலம்: 34 ; பக்கம்: 21 )

மற்றைய இயக்கங்களுடன் புலிகளையும் ஒன்றிணைத்து மாகாணசபை அதிகாரத்தைப் பகிர்ந்தளிப்பதன் மூலம் புலிகளையும் தங்களில் தங்கியிருக்கச் செய்வதே இந்திய அரசின் நோக்கமாயிருந்தது. இதற்கு இணங்காத புலிகள் இலங்கை இரா-ணுவத்தில் 13 புலி உறுப்பினர்கள் தற்கொலை செய்துகொண்டமையையும் (பிடிபட்ட 13பேரும் தற்கொலைசெய்துகொள்வதைத் தடுக்க இந்திய உயர் அதிகாரிகள் முயற்சித்ததாகவும் இலங்கை இராணுவ அதிகாரிகள் மேலிட உத்தரவின்படி இவர்களுடன் ஒத்துழையாமல் புலிகளின் அனுசரணையுடன் புலி உறுப்பினர்கள் தற்கொலை செய்துகொள்ள வழிசெய்ததாகவும் -'முறிந்த பனைமரம்' நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது. இத் தற்கொலைகளைக் காரணமாகவைத்து மோதல்கள் ஆரம்பிக்கலாமென்ற காரணத்தினாலேயே தற்கொலைகளைத் தடுப்பதில் இந்திய அதிகாரிகள் கவனம் காட்டியதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.) திலீபனின் உண்ணாவிரதத்தையும் காரணங்களாக முன் வைத்து இந்திய இராணுவத்தைத் தாக்கவாரம்பித்தனர்.

ஆரம்பத்தில் தவிர்க்கவிரும்பினும், தனது இராணுவ பலத்தை அதிகமாகவும், புலிகளின் பலத்தைக் குறைத்தும் மதிப்பீடு செய்ததாலேயே இந்திய அரசு புலிகள் மீதான தாக்குதல்களை ஆரம்பித்தது. அத்துடன் புலிகள் தவிர்ந்த ஏனைய இயக்கங்களின் -குறிப்பாக ஈ.பி.ஆர்.எல்.எவ்வின்- மக்களிடையேயான -தொடர்புகளையு , கருத்தையும் கவனத்திலெடுத்திருந்தது.

ஆனால் இந்திய இராணுவம் புலிகள் மீதான தாக்குதல்களை நடத்திக்கொண்டிருந்தமை-யைப் பாவித்து தமது எதிரிக-ளான புலிகளையும், புலிகளின் ஆதரவாளர்களையும் ஈ.பி.ஆர். எல்.எவ், டெலோ, ஈ.என்.டி. எல்.எவ் குழுக்கள் கூட்டாகப் பழிவாங்கின. இப் பழிவாங்கல் நடவடிக்கையை இவர்களை அந்நியமாக்கும் இந்திய அரசின் நடவடிக்கையெனக்கொள்ள முடியாது.

அந்நிய இராணுவத்தின்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அட்டூழியங்களுக்குத் துணைபோனது, கொலை, கொள்ளை, பாலியல்வன்முறை, கடத்தல், கட்டாய இராணுவப் பயிற்சி... என்று அனைத்து வழிகளிலும் மக்களுக்கு எதிராக இயங்கியமையே இவர்களை அந்நியப்படுத்தியதுடன், விரோதிகளாக்கியது. இந் நிகழ்வுகளும் இந்திய அரசின் நோக்கங்கள் தோல்வியடைவதற்கான காரணங்களில் அடங்கும்.

எனவே மாகாணசபையில் பங்குபற்றிய இயக்கங்களைக் - கொண்டு அனைத்து மக்கள் விரோதச் செயல்களையும் செய்வித்து, விரோதிகளாக்கி, அந்நியப்படுத்தும் நடவடிக்கையில் இந்திய முதலாளித்துவம் வெற்றி பெற்றது என்ற கருத்து பிழையானதென்றே கருதுகிறோம்.

... உலகிலேயே நான்காவது பெரிய இராணுவத்திற்கெதிராகப் போராடினோர்கள் என்ற கருத்தின் மூலம் கடந்த கால கறைபடிந்த வரலாறுகளை மூடி மறைத்து புலிகள்தான் மக்களின் ஏகபோக பிரதிநிதிக்குரிய தகைமையுடையவர்கள் என்ற மாயையை உருவாக்குவது இந்திய அரசின் இரண்டாவது நோக்கமென கட்டுரையாளர் குறிப்பிடுகிறார் ...
(கலம்: 35 ; பக்கம் 47 )

புலிகள் பற்றிய இந்திய அரசின் மதிப்பீடுகளை முதலிலே குறிப்பிட்டுள்ளோம். அத்துடன் எந்தவொரு அரசும் தனது இராணுவத்தின் மேல் கறையைப்பூசி தோல்வியடைவதாகக் காட்டி ஒரு 'விடுதலை' இயக்கத்தை மக்கள் தலைமையாக்கியதாக-வரலாறே இல்லை. அப்படியொரு தேவையும் எந்த அரசுகளுக்கும் இதுவரை ஏற்படவில்லை.

புலிகளைப் பலவீனப்படுத்துவதே இந்திய அரசின் நோக்கமாக இருந்ததே தவிர, தன்னைப் பலவீனமாக்க் காட்டி, புலிகளைப் பலப்படுத்தியதென்பது ஏற்றுக்கொள்ளக்கூடியதொன்றல்ல என்றே நாம் கருதுகிறோம்.

தகவல்களுக்கு உதவியவை:

1. முறிந்த பனைமரம்.

2. புதிய ஜனநாயகம்.

3. இயக்கப் பிரசுரங்கள்.



www.tamilarangam.net

# தூண்டில்

டிசம்பர் 1990 இலம்: 36

ஆசிரியர் குழு ........ கடலோடிகள்

வெளியீடு ............ தென்னாசிய நிறுவனம்

முகவரி ............. THOONDIL
SÜDASIEN BÜRO
Grosse Heimstr 58
4600 Dortmund 1
West Germany

தொலைபேசி இல. .... (0231) 136633

கதைகளில் வரும் பெயர்கள் கற்பனையே.

ஆக்கதாரர்களே அவர்களின் ஆக்கங்களுக்குப் பொறுப்பாளிகள்.

பெயர், முகவரி போன்ற முழுவிபரங்களும் இல்லாத ஆக்கமோ, விமர்சனமோ பிரசுரிக்கப்பட மாட்டாது.

## சந்தா விபரங்கள்

மேற்கு ஜேர்மெனி: 6 மாதங்கள் - 20,- டி.எம்
1 வருடம் - 38,- டி.எம்

சந்தா அனுப்பி வைக்க வேண்டிய வங்கி கணக்கு இல. 571 001 799
Stadt Sparkasse Dortmund
BLZ 440 501 99

ஐரோப்பிய நாடுகள்: 6 மாதங்கள் - 25,- டி.எம்
1 வருடம் - 48,- டி.எம்

ஏனைய நாடுகள்: 1 வருடம் - 45,- யு.எஸ்.டொலர்

சந்தா அனுப்பி வைக்க வேண்டிய தபால் கணக்கு இல.30807468
Postscheckamt Dortmund
BLZ 440 100 46

சந்தா அனுப்பியதும் அவ்விபரத்தைக் கடிதம் மூலம் எமக்கு அறிவிப்பதனால் காலதாமதத்தைத் தவிர்த்துக் கொள்ளலாம்.

நன்றி.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

'அமைதி'
'மனிதாபிமானம்'
'சமாதானம்'
. . . . . . . . .
. . . . . . . . .
கோசங்களும்,
கோரிக்கைகளும்,
கட்சிக் கொள்கைகளும்
எங்கள் கனவுகளைத்
தாராளமாய் நிரப்பிவிட்டன.

நிஜத்தில் நாங்கள்
மரணத்தால்
விறைத்துப் போயிருக்கிறோம்.

'அரசு'
'ஏகாதிபத்தியம்'
'விடுதலை இயக்கம்'
. . . . . . . . .
. . . . . . . . .
நிழலாகத் துரத்தும்
சாவு
இவற்றில்
எதுவாகவும் இருக்கலாம்.

'சமூக மாற்றம்'
'புது யுகம்'
'விடியல்'
. . . . . . . . .
. . . . . . . . .
சொச்ச நம்பிக்கைகள்
இன்னும்
எத்தனை நாட்களுக்கு
எங்கள்
ஊன்றுகோல்களாயிருக்க முடியும்?

முடமாகியும்
நரங்கள்
உயிர்த்திருக்கும்வரை
நீங்கள்
எங்களைப் பற்றி
கூட்டம் போடலாம்,
கவிதை பாடலாம்,
கதை எழுதலாம்,
கொடி ஏற்றலாம்,
தீபம் எரிக்கலாம்,
இன்னும் முற்போக்காய்
தேடல் செய்யலாம்,
ஆய்வு செய்யலாம்....

ஒருவேளை
நாங்கள்
இறந்துபோய்விட்டதாய்
நீங்கள்
அறிய நேர்ந்தாலும்
கவலை வேண்டாம்.
கட்டப்படாத கல்லறை
கருப்பொருளாய் கி(ட)டைக்கும்.

உங்கள்
தேடல்கள்...
ஆய்வுகள்....
தொடரட்டும்
இப்போது செய்யும்
கதைத்தலையும்
பின்னர் நிறுத்தி,
பட்டனை அழுத்த
ஓட்டமெற்றிக்காக
தேடல்...
ஆய்வு ...
அனைத்தையும்
தானே செய்துகொள்ளும்
கொம்பியூட்டரைக்
கண்டுபிடிக்கும்வரை.

• அப்பு •